
வானவில்

VAANAVIL

இதழ் 173 வைகாசி 2025

ISSUE 173 May 2025

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் சொல்லும் செய்தி!




இலங்கையில் ஏப்ரல் 6ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன.

இந்தத் தேர்தல் இரண்டு வகைகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.

முதலாவதாக, நீண்டகால இழுத்தடிப்புக்குப் பின்னர் இந்தத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

இரண்டாவதாக, இதுவரை காலமும் இருந்தது போல அல்லாமல் முதன் முறையாக பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் ஒன்றின் கீழ் இந்தத் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியும், அரசாங்கமும் தேசிய மக்கள் சக்தி என்ற புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு முன்னணியைச் சேர்ந்தவர்கள். (ஆனால் இந்த முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. 60 வருட வரலாற்றைக் கொண்டது)

கடந்த வருடம் (2024) செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் மூலம் இன்றைய ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவானார்.

இலங்கை அரசியல் அமைப்பின் பிரகாரம் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கு 50 சத வீதத்திற்கு அதிகமான வாக்குகள் எடுத்திருக்க வேண்டும் என்ற போதிலும், சுமார் 43 வீதம் வாக்குகள் மட்டுமே பெற்ற அனுர குமார திசாநாயக்க சட்டத்தில் உள்ள ஓட்டைகள் மூலம் ஜனாதிபதியாக முடிந்தது. (மிகுந்த பாதுகாப்புடன் அடைக்கப்படும் வேலியிலும் ஒரு 'நாய்ப்பொட்டு' இருக்கும் என்ற கூற்றுக்கு இதுவொரு உதாரணம் எனலாம்) அவருக்கு எதிரான பிரதான வேட்பாளர்களான சஜித் பிரேமதாசவும், ரணில் விக்கிரமசிங்கவும் தனித்தனியாக எடுத்த வாக்குகளின் மொத்த கூட்டுத்தொகை அனுர எடுத்ததை விட அதிகமானதாகும் (59 வீதம்) என்பதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து நொவம்பரில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜனாதிபதியின் கட்சியான தேசிய மக்கள் சக்தி 159 உறுப்பினர்கள் பெற்று, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றியீட்டியது. (இலங்கையில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவரின் கட்சியே பொதுத்தேர்தலிலும் வெற்றியீட்டுவது ஒரு பாரம்பரியமாக இருந்து வருகிறது)

இதன் அடிப்படையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் முடிவுகளும் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு அரசாங்கத்துக்கும் மற்றவர்களுக்கும் இருந்தது. ஆனால், வந்துள்ள முடிவுகள் எதிர்மாறாகவே உள்ளன.

அரசாங்க கட்சியான தேசிய மக்கள் சக்தி பல சபைகளில் முன்னிலை வகிக்கின்ற போதிலும், எதிர்க்கட்சிகளும் கணிசமான வெற்றிகளைப் பெற்றுள்ளன. குறிப்பாக தேசிய மக்கள் சக்திக்கு கடந்த பொதுத்தேர்தலில் பெற்ற வாக்குகளில் சுமார் 20 இலட்சம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் ஆறுமாத ஆட்சியின் பின்னர் இவ்வளவு தொகையான வாக்குகள் இழப்பென்பது சாதாரண விடயமல்ல.

அனுர அரசாங்கத்தின் இந்த வீழ்ச்சிக்கு அவரது அரசாங்கம் முன்னைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சர்வதேச நாணய நிதியத்தின் சொற்படி நடப்பதை மக்கள் வெறுத்ததே காரணம் எனக் கூற முடியாது.

ஏனெனில், மக்கள் எப்பொழுதும் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பார்த்தே முடிவெடுப்பவர்கள். அவர்கள் எப்பொழுதும் நேரடி விளைவுகளைப் பார்ப்பார்களே தவிர, அதற்கான காரணங்களை ஆராய்வதில்லை.

அந்த வகையில் பார்த்தால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வருவதற்கு முன்னர் தேர்தல் காலத்தில்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

# இந்தியா–பாகிஸ்தான் மோதல் தவிர்க்கப்பட்டுவிட்டதா?

ஏப்பிரல் மாதம் 22ந் திகதி இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள ஜம்மு காஷ்மீரின் பஹல்காமின் பைசரன் பள்ளத்தாக்கில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலை பாகிஸ்தானில் இருந்து இயங்கும் தீவிரவாத அமைப்பான 'லஷ்கர் இ தொய்பா' (Lashkar-e-Taiba - LeT)வின் கீழ் காஷ்மீரில் இயங்கி வரும் 'தி ரெசிஸ்ட்டன்ஸ் ஃபிரன்ட்' (The Resistance Front) என்ற இயக்கம் உரிமை கோரியதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்தன. அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் இந்தியாவிற்கு வருகை தந்திருந்த வேளையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா உடனடியாக பஹல்காம் தாக்குதலுக்கு பாகிஸ்தானே பொறுப்பென குற்றஞ்சாட்டியது. மேலும் அத்தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இந்தியா, பாகிஸ்தானுடனான சிந்துநதிநீர் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாகவும் பாகிஸ்தானியர்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்றும் அறிவித்தது. இந்தியாவின் இந்த நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தானும் சிம்லா ஒப்பந்தம் இரத்து, இந்தியர்கள் பாகிஸ்தானில் இருந்து வெளியேற வேண்டும் மற்றும் பாகிஸ்தான் வான்பரப்பில் இந்திய விமானங்கள் பறக்க தடை போன்றவற்றை அறிவித்தது.

மே 7 முதல் மே 10 வரை பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதிகளில் இந்திய இராணுவம் 'ஒப்பிரேஷன் சிந்தூர்' (Operation Sindoor) என்ற பெயரில் வான்வழி தாக்குதலொன்றினை மேற்கொண்டது. பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மற்றும் விமானத்தளங்களின் மீது இந்த தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாகிஸ்தானும் ஏவுகணை, ட்ரோன், குண்டு வீச்சு, எல்லையில் துப்பாக்கிச் சூடு என இந்தியாவின் தாக்குதலுக்கு எதிராக பதில் தாக்குதலில் ஈடுபட்டது.

தென்னாசியாவின் அணுவாயுத நாடுகளுக்கிடையே பெரும் யுத்தம் மூண்டுவிடுமோவென உலகமே அஞ்சிக் கொண்டிருக்கையில், மே 10ந் திகதி இந்தியாவும் பாகிஸ்தானும் போர் நிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டதாக அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அறிவிப்பொன்றினை விடுத்தார். இதனையடுத்து உடனடியாக இருநாடுகளும் அதிகாரபூர்வமாக தாக்குதல்களை நிறுத்துவதாக அறிவித்தன.

இதனைத் தொடர்ந்து, டொனல்ட் ட்ரம்ப் "இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போரை நிறுத்த மத்தியஸ்தம் செய்தது நான்தான்" என பெருமையாக ஆறு தடவைகள் கூறியுள்ளார். ஆனால் இந்தியாவோ அதனைத் தொடர்ந்து மறுத்து வருவதோடு, எந்த நாட்டின் தலையீடும் இல்லாமல் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டது எனவும், இது இடைக்காலப் போர் நிறுத்தம்தான் எனவும் கூறி வருகின்றது. அத்துடன் நீண்ட காலமாகவே காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா. சபை உட்பட, எந்தவொரு நாட்டின் மத்தியஸ்தத்தையும் இந்தியா விரும்பவில்லை.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கடந்த 78 ஆண்டு கால பதற்றத்தின் மையமாக காஷ்மீர் உள்ளது. இரு நாடுகளும் இதுவரையில் 5 முறை நேரடி யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. இது தவிர, இரு நாடுகளுக்குமிடையே பலமுறை எல்லைச் சண்டைகளும் இராணுவ முறுகல்களும் நிகழ்ந்துள்ளன. இந்தியா, பாகிஸ்தானுக்கிடையிலான போர்களுக்கும், சச்சரவுகளுக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ காஷ்மீர் பிரச்சனையே பிரதான காரணமாக இருந்து வந்திருக்கின்றது. ஆனால் 1971 ஆம் ஆண்டு, இரு நாடுகளுக்குமடையே நடந்த போர் மாத்திரம் பங்களாதேஷ் பிரச்சனை பிரதான காரணமாக அமைந்தது.

1846 இல் அமிர்தசரஸ் உடன்படிக்கை மூலம் இந்தியாவை காலனித்துவ ஆட்சிக்குட்படுத்தியிருந்த பிரித்தானியாவிடமிருந்து 75 இலட்சம் ரூபாய்க்கு முஸ்லீம்கள் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த காஷ்மீரை விலை கொடுத்து இந்து மதத்தைச் சேர்ந்த டோக்ரா வம்சத்தினர் வாங்கினார்கள். இந்தியா விடுதலை பெற்றபோது டோக்ரா வம்சத்தைச் சேர்ந்த மன்னர் ஹரி சிங் காஷ்மீரை ஆண்டு வந்தார். 1947 இல் இந்தியா – பாகிஸ்தான் சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியாவுடன் இணைவதா, பாகிஸ் தானுடன் இணைவதா என்கிற குழப்பம் அரசருக்கு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தை சேர்ந்த பழங்குடிகள், 1947 ஒக்ரோபரில் பாகிஸ்தானின் இராணுவ உதவியுடன் காஷ்மீருக்குள் புகுந்து காஷ்மீரின் சில பகுதிகளைக் கைப்பற்றினார்கள். தமது அரசாட்சியைப் பாதுகாத்துக்கொள்ள காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் அவசர அவசரமாக ஹரி சிங் கையெழுத்திட்டார். இதனையடுத்து இந்திய இராணுவம் காஷ்மீருக்குள் நுழைந்து பழங்குடிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தினார்கள். இதுவே இந்தியா–பாகிஸ்தான் இடையேயான முதலாவது யுத்தமாக உருவெடுத்து, காஷ்மீர், அசாத் காஷ்மீர் – ஜம்மு காஷ்மீர் எனவும் பிரிக்கப்பட்டது.

பிரித்தானிய காலனி ஆதிக்கத்தின் விளைவே காஷ்மீர் பிரச்சனை. இந்தியாவும் பாகிஸ்தானும் அணுவாயுங்களை கொண்டிருப்பதால் யுத்தத்தால் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. அண்மைய பஹல்காம் தாக்குதல் உட்பட, பல பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் பின்தளமாக பாவிக்கப்படுகின்றது என்பது உண்மையாக இருந்தாலும் கூட, அதற்காக பாகிஸ்தான் மீது குண்டுகளை வீசி பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்பதை இந்தியா தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இந்தியா–பாகிஸ்தான் யுத்தம் தற்போதைக்கு ஐந்தாவது தடவையாக நிறுத்தப்பட்டு, பெரும் அழிவுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. இரு நாடுகளும் யுத்தம் புரிவது ஏகாதிபத்தியத்திற்கே நன்மை பயக்கும் என்பதையுணர்ந்து, இரண்டு அரசுகளும் இதுவரையில் தாங்கள் கற்றுக் கொண்டவற்றை மதிப்பீடு செய்து, காஷ்மீர் பிரச்சனை தொடர்பாக நிரந்தரத் தீர்வொன்றினை நோக்கி நகர வேண்டும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.

**புரட்சிகர மே தின வாழ்த்துக்கள்!**

*சர்வதேச ஐக்கியம் மற்றும் தோழமையுணர்வு என்ற அடிப்படையில் ஒட்டுமொத்த மனித குலத்தின் அமைதி மற்றும் மகிழ்வான எதிர்காலத்திற்காக போராடி வரும், உலகெங்கிலுமுள்ள தொழிலாளி வர்க்கத்தை மே தினத்தன்று நாங்கள் வாழ்த்துகிறோம்.*

**–ஆசிரியர் குழு**

# பிரதமர் மோடியின் விஜயமும் அரசியல் சந்தர்ப்பவாதமும்



இந்த ஆசிரியர் தலையங்கம் பிரசுரமாகும் போது இந்தியப் பிரதமர் மோடி நமது நாட்டை விட்டுப் போயிருப்பார். பிரதமர் மோடியின் விஜயத்தின் போது மிகவும் முக்கியமான பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் உட்பட பல புரிந்துணர்வு உடன்படிக்கைகள் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தால் கையெழுத்தாகி உள்ளன.

ஜனாதிபதி திசாநாயக்க அவராகவே இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் இலங்கையின் நிலப்பகுதியை எவரேனும் பயன்படுத்த அனுமதிக்க மாட்டேன் என்ற உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

1987 யூலை 29இல் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டு 38 ஆண்டுகளின் பின்னர் இரு நாடுகளுக்குமிடையிலான இந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது. இந்த உடன்படிக்கையில் அடங்கியுள்ள விபரங்கள் அமைச்சரவைக்குக் கூடத் தெரிவிக்கப்படவில்லை.

அந்த நேரத்தில் தற்போதைய ஜனாதிபதி அங்கம் வகித்த ஜே.வி.பி., இந்தியாவின் நடவடிக்கைகளை தவறாக அர்த்தப்படுத்தி, அது இந்திய விஸ்தரிப்புவாத நடவடிக்கைகள் என்றும், ஜெயவர்த்தன அரசு நாட்டின் நலன்களை இந்தியாவுக்கு விற்றுவிட்டது என்று கூறியும், ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கினர்.

இன்று, பிரதான நாடாளுமன்ற எதிர்க்கட்சி, இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாவது குறித்து நாடாளுமன்றத்துக்கு மட்டுமின்றி, அமைச்சரவைக்குக் கூட அறிவிக்காததுடன், வெளிப்படைத் தன்மை பேணப்படவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளது. இருந்தபோதும், இந்த உடன்படிக்கைக்கு எதிராக பொதுசன ஆர்ப்பாட்டம் எதுவும் நடைபெறவில்லை. முன்னிலை சோசலிசக் கட்சியும், அது போன்ற சிலரும் கொழும்பில் ஒப்பந்தத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக அறிவித்திருந்த போதும், அதற்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது. அதைத் தொடர்ந்து எவ்வித சம்பவங்களும் நடைபெறவில்லை.

மிகவும் விரும்பத்தகாத முறையில் 1987 யூலையில் “சமாதான உடன்படிக்கைக்கு” எதிராக அப்போதைய ஜே.வி.பி. தலைமை வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்ததுடன், ஆயுதக் கிளர்ச்சியிலும் ஈடுபட்டது. ஆனால் இப்பொழுதோ உடன்படிக்கைகள் சமாதான பூர்வமாக கையெழுத்தாகி உள்ளன. புதிய தலைவர்கள் தமது தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொண்டார்கள் போலும். அல்லது தற்போதைய ஆட்சியாளர்கள் தமது முன்னைய ஆட்சியாளர்களிடமிருந்து இழிவானதும் சந்தர்ப்பவாத ரீதியிலுமான நடைமுறையைக் கற்றுக் கொண்டார்களோ?

உதாரணமாக, எமது ஜனாதிபதியின் ஜே.வி.பி. கட்சி 2005 இல் சம்பூர் மின்நிலையத் திட்டத்தை எதிர்த்ததால் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தது. அந்தத் திட்டத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை எமது அரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் எப்போதோ செய்யப்பட்டிருந்தது. இந்தத் திட்டம் திரிகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்தது. இன்னொரு உடன்படிக்கை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே எரிசக்தி வர்த்தகத்தை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

எமது நாடு அதன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் நம்பிக்கையான, பெரிய அளவிலான எரிசக்தியின் உதவியை எதிர்பார்த்திருந்தது. எமக்கு எரிசக்தித் துறையையும், உள்கட்டுமானத் துறையையும், எரிசக்தி முகாமைத்துவத்தையும் அதிகரிக்க வேண்டிய தேவை இருந்தது. இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான நிதி வளம் இலங்கையிடம் இல்லை. எனவே, இந்தியாவின் உதவியைப் பெறுவது பெரும் இலாபமாகும்.

இருந்தபோதிலும், சம்பூர் பகுதியிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மக்களின் மனித உரிமைகளை இந்தத் திட்டம் மீறுகிறது என்று சொல்லி, அதை நடைமுறைப்படுத்த விடாமல் ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்தது. அந்த நேரத்தில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால், வரட்சியான காலங்களில் அடிக்கடி ஏற்படும் மின் வெட்டு இருந்திருக்காது.
அப்படியிருக்க என்ன விடயம் மனதில் மாற்றத்தைக் கொண்டு வந்தது? இப்பொழுது இந்த உடன்படிக்கையிலுள்ள விதிகள் அந்தப் பகுதியிலுள்ள பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதா? ஜே.வி.பி. சம்பூர் பகுதியிலுள்ள கிராம மக்களின் நலனில் உண்மையில் அக்கறை செலுத்துகிறதா? அல்லது ஜே.வி.பி. தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு சம்பூர் பகுதி மக்களின் பிரச்சினைகளைப் பயன்படுத்திக் கொண்டதா?

என்ன இருந்தாலும், அரசாங்கத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரல், எப்படியிருந்தாலும் மோடியின் வருகை, இலங்கைக்கு பல நன்மைகளைக் கொண்டு வந்துள்ளது. இந்தியாவின் டிஜிற்றல் (Digital) முறை சீனாவினுடையது அளவிற்கு வளர்ச்சியானது அல்ல என்ற போதும், இந்தத் துறையில் இலங்கையின்

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# பிலிப் குணவர்த்தன: 1930களில் தூரநோக்குள்ள பொருளாதாரக் கொள்கைகளை முன்வைத்த மார்க்சிஸ்ட்

இலங்கையில் "மார்க்சிசத்தின் தந்தை" என அழைக்கப்படும் முதுபெரும் அரசியல்வாதி பிலிப் குணவர்த்தனவின் (Philip Gunawardena) 53ஆவது நினைவு தினம் அவரது நினைவுக் குழுவால் கொழும்பில் கொண்டாடப்பட்டது. பிலிப் குணவர்த்தனவின் குடும்பத்தினருடன் நெருக்கமாகவுள்ள சில முன்னணி பௌத்த குருமார், அவரது எழுத்துகளில் ஆர்வமுள்ள சில இராஜதந்திர பிரதிநிதிகள், முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் ஆகியோர் மட்டுமே பங்குபற்றிய எளிய நிகழ்வாக இது அமைந்தது.

பிலிப் அரசியலில் இருந்த போது அவருக்கு நெருக்கமாக இருந்த கூட்டுறவுத்துறை இயக்கம் சார்ந்தவர்களும் பங்கு பற்றினர். மார்க்சினதும் அவரது சகாக்களதும் அரசியல் – பொருளாதாரக் கொள்கைகளை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே இலங்கையில் நிறுவன மயப்படுத்திய பிலிப்பின் இந்த நிகழ்வில் ஆச்சரியப்படத்தக்க வகையில் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதிநிதிகள் எவரும் பங்குபற்றவில்லை.

இலங்கையில் தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சிக்கும், கூட்டுறவுச்துறையின் முனனேற்றத்துக்கும், 1956இல் பொது மனிதனின் யுகத்தை ஆரம்பித்து வைப்பதிலும், பிலிப் ஆற்றிய பங்களிப்புகள் குறித்து முன்னாள் வங்கியாளரும், தொழிற்சங்கவாதியும், எழுத்தாளரும், சொற்பொழிவாளருமான ருசிரிபால தென்னக்கூன் (Rusiripala Tennakoon) மட்டுமே நிகழ்வில் உரையாற்றினார்.

சாதாரண விவசாயிகளினதும், சிறு வர்த்தகர்களினதும் வளர்ச்சிக்காக பிலிப் வங்கித்துறையில் கூட்டுறவு சமஸ்டி வங்கிப் பாணியில் ஆற்றிய முன்னோடிப் பணி குறித்து சிலாகிக்கப்பட்டது. 1956இல் பண்டாரநாயக்க அரசில் பிலிப் ஒரு அமைச்சராக இருந்த நேரத்தில் அவரால் இந்த வங்கியின் உருவாக்கத்தைப் பார்க்க முடியவில்லை. 1961இல் அவர் எதிர்க்கட்சியில் இருந்த போதே மக்கள் வங்கி (People's Bank) என்ற பெயரில்



இந்த வங்கி உருவாக்கப்பட்டது.

ஆனால், இந்த வங்கியின் உருவாக்கத்துக்கான அடிப்படை 1958இல் விவசாயிகளின் உரிமைகளை வலியுறுத்தியும், நிலச் சொந்தக்காரர்களின் கடமைகளை வலியுறுத்தியும், கொண்டு வரப்பட்ட நெற்காணி மசோதாவுடன் (Paddy Lands Act) இணைந்ததாகும். இலங்கைச் சமூகத்துக்கு பிலிப்பால் அறிமுகப்படுத்தப்பட்ட புதுமைகள் இலங்கையின் வரலாற்றில் அழியாமல் பொறிக்கப்பட்டுள்ளன என ருசிரிபால சபையோருக்குக் கூறினார்.

**டபிள்யு.ஏ.விஜேவர்த்தன**
**(W.A.Wijewardena)**

பிலிப் நில வசதியுள்ள ஒரு மேல்தட்டுக் குடும்பத்தில் பிறந்து, நாட்டிலுள்ள சிறந்த கல்லூரிகளில் கல்வி கற்று, அமெரிக்காவிலுள்ள ஐவி–லீக் பல்கலைக்கழகங்களில் (Ivy-league Universities) பட்டம் பெற்ற போதும், ஒரு எளிமையான சாதாரண மனிதனாகவே வாழ்ந்தார். அவர் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா, இந்தியா ஆகிய இடங்களில் விரிவாக சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் சிங்களம், ஆங்கிலம், ஸ்பானிஸ், பிரெஞ்சு மொழிகளில் சரளமாக உரையாடக் கூடியவர். வேறு யாருக்காவது இந்தத் தகைமைகள் இருந்தால் பொதுமக்களின் தலைகளுக்கு மேலே பல அடிகள் உயரத்துக்கு ஏறிச் சென்றிருப்பர். ஆனால், பிலிப் வித்தியாசமான பெறுமானம் உள்ளவர். 1960 இல் நான் பாடசாலையில் இடைநிலைக் கல்வி மாணவனாக இருந்தபோது, ஹொரனவில் (Horana) நடைபெற்ற ஒரு அரசியல் கூட்டத்தில் பங்குபற்றியதை நினைத்துப் பார்க்கின்றேன். கூட்ட மேடையில் பேச்சாளர்கள் எவரும் இல்லாததால், பொதுமக்களின் நேரத்தைப் போக்குவதற்காக பாடகர்களும் நடனக்காரர்களும் சில நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தனர். வெடியோசைகளின் முழக்கத்தைத் தொடர்ந்து பேச்சாளர்கள் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு வந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஒரு வீதியின் மூலையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது ஒலிவாங்கியின் பின்னால் நின்ற பிலிப்பை மக்கள் தெளிவாகப் பார்க்க முடிந்தது. கூட்டத்துக்கு மக்களை அழைத்து வர பஸ்கள் இல்லாத காரணத்தால் என்னைப் போலவே மக்கள் அனைவரும் நடந்தே கூட்டத்துக்கு வந்திருந்தனர். சிலர் பொதுப் போக்குவரத்து பஸ்களில் தொங்கிக் கொண்டும், வேறு சிலர் துவிச்சக்கர வண்டிகளிலும் கூட்டத்துக்கு வந்திருந்தனர். பிலிப் வேறு இருவருடன் ஒரு பழைய காரை கூட்டத்துக்கு ஓட்டி வந்தார். அவர்களில் ஒருவர் அந்த நேரத்தில் வித்தியலங்காரப் பல்கலைக்கழகத்தில் (Vidyalankara University) விரிவுரையாளராக இருந்த காலம் சென்ற ஜே.ஆர்.பீ. சூரியபெரும (J.R.P.Sooriyapperuma). மற்றவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) பௌத்த தத்துவவியல் பேராசிரியரான டபிள்யு.எஸ்.கருணரத்ன (W.S.Karunaratne).

பிலிப்பை மக்களுக்கு நன்கு தெரியுமென்பதால், மற்ற இரு பேச்சாளர்களையும் அவர் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தினார். இயற்கையாகவே பிலிப் பொது மனிதர்களிடமிருந்து விலகாமலே இந்த நிகழ்வை நடத்தினார்.

**1930களில் பிலிப்பின் நோக்கு**

பலருக்கு சுதந்திரத்துக்கு பிந்தைய பிலிப்பின் அரசியல் பற்றித் தெரியும். ஆனால் அதற்கு முந்தைய காலகட்டம்

பற்றித் தெரியாது. அவர் 1936இல் சட்டசபை (State Council) உறுப்பினராக இருந்த காலத்தில் தீவிர அரசியலில் இறங்கினார். சட்ட சபையில் நடைபெற்ற விவாதங்களின் போது தொடர்ந்து பங்குபற்றும் ஒரு பேச்சாளராக அவர் இருந்தார். அதற்கும் அப்பால் அவரே இலங்கை மக்கள் சம்பந்தமான பிரச்சினைகள் பற்றிய முன்மொழிவுகளை முன் வைத்தார். அவர் காலனித்துவ அரசாங்கத்தின் மீதும், அதன் அமைச்சர்கள் மீதும் கடுமையான, ஆனால் காத்திரமான விமர்சகராக இருந்தார்.

அவரது பொருளாதார – சமூக தத்துவார்த்தம் பற்றி தற்கால இலங்கையர்களுக்கு அதிகம் தெரியாது. ஏனெனில், காலனித்துவ அரசாங்கம் அவரது பேச்சுகளை ஹான்சார்ட் (Hansard) என்ற நாடாளுமன்றப் பதிவேட்டிலிருந்து இருட்டடிப்புச் செய்துவிட்டது. அவற்றை தேசிய சுவடிகள் திணைக்களத்தில் (National Archives) மட்டுமே பெற முடியும். இந்த விடயத்தில் ஒரு வெற்றிடம் இருப்பதால் அவரது பேச்சுகளைத் தொகுத்து ஒரு தொகுதியாக வெளியிட வேண்டும். நான் பொருளாதாரம் ~ சமூகம் சம்பந்தமான அவரது உரைகளிலிருந்து சிலவற்றை இங்கே தருவது, வாசகர்கள் அவற்றிலிருநது இன்றைய நிலைமைகளுக்குத் தேவையானதை எடுத்துக் கொள்வதற்காகவே.
நாட்டில் மலேரியா (Malaria) பெருந்தொற்று நோய் பரவி 180,000 பேர் வரை அதனால் உயிரிழந்த நிலைமையில்,1935-36 ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் போது, 27 இலட்சம் மேலதிகமாக இருப்பதை பிலிப் கண்டு பிடித்தார். அந்த நிதியைப் பயன்படுத்தி அந்தப் பெருந்தொற்றை இல்லாதொழிக்காமல் விட்டால் நாட்டின் சுகாதார நிலைமையை மேம்படுத்த முடியாது. பிலிப்பின் கருத்துப்படி, மக்களின் வரிப்பணத்திலிருந்து பெறப்பட்ட அந்த மேலதிகப் பணம் பயன்படுத்தப்படாததால் அந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதற்கு அமைச்சரவையே முழுப் பொறுப்புமாகும். அமைச்சர்கள் சில வைத்தியசாலைகளை மூடி அத்தியாவசிய வைத்திய சேவையில் சில குறைப்புகளைச் செய்ததால்தான், அந்தப் பெருந்தொற்று நோய் கடுமையாகப் பரவக் காரணம் என பிலிப் குற்றம் சாட்டினார். நாட்டின் வருமானம் அதிகமாக இருக்கையில் நாட்டின் தேவைகளைக் கணக்கில் எடுக்காது செலவைக் குறைத்த (பிரித்தானிய) காலனிய வரவு செலவுத் திட்டத்தின் மீது இது ஒரு பாரிய குற்றச்சாட்டாகும்.

**ஒரு மார்க்சியவாதியின் நீண்டகால இலட்சியங்கள்**

பிலிப் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தான் பிரதிநிதித்துவப்படுத்திய லங்கா சமசமாஜ கட்சி சார்பாக மூன்று இலட்சியங்களை முன் வைத்ததுடன், மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதற்காக 22 நடவடிக்கைகளையும் முன் மொழிந்தார். மூன்று இலட்சியங்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கோட்பாடுகளைத் தழுவி இருந்ததால் அவறறுக்கு காலனித்துவ அரசாங்கத்தினதும் அதன் அமைச்சரவையினதும் ஆதரவு இருக்கவில்லை.

அவை வருமாறு:

முதலாவது, உற்பத்தியையும் விநியோகத்தையும் பண்டப் பரிமாற்றத்தையும் சமூகமயமாக்கல்.
இரண்டாவது, தேசிய சுதந்திரத்தை அடைதல்.
மூன்றாவது, அரசியல் மற்றும் பொருளாதார சமத்துவமின்மை, வர்க்க, இன, நம்பிக்கை, பாலினம் போன்றவற்றின் அடிப்படையில் உருவாகும் அடக்குமுறைகள் என்பனவற்றை இல்லாதொழித்தல். இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்ற போதிலும், இன்று அது பொருத்தமில்லாமல் உள்ளது.

முதலாவதாக, அரசாங்கமும் தனியார்துறையும் இணைந்த நோக்கில் நாட்டில் சமூக ஜனநாயகத்தை அடையும் இலட்சியம். நாட்டின் எல்லா மக்களுக்கும் உரிய வகையில் இலங்கையை “ஜனநாயக சோசலிச குடியரசு” என்று அரசியலமைப்பு கூறுகிறது. மூன்றாவதாக, உலகம் முழுமையும் பேச்சுக்கிடமில்லாத இலட்சியத்துடன் சமூகங்கள் தொடர்ந்து இருப்பது. இலங்கை இதற்கு வாயளவு மட்டும் சேவை செய்வதுடன், எல்லா அரசியல் கட்சிகளும் வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் இருக்கின்றன.

**உடனடி பொருளாதாரச் சீர்திருத்தங்கள்**

பிலிப் நடவடிக்கைகளாக குறிப்பிட்டவை பின்வருமாறு:

1. உள்ளூரில் அல்லது கைத்தொழில்துறையில் நிலவும் குழந்தை உழைப்பை சுரண்டுவதை இல்லாதொழித்தல். பிலிப்பின் முன்னோடியான இந்த யோசனையின் அடிப்படையில் 1999 இல் தான் சர்வதேச தொழில் ஸ்தாபனம் (International Labour Organisation - ILO) மோசமான குழந்தை உழைப்புக்குத் தடை விதித்தது. இலங்கை 2001இல் தான் இதை இணைத்துக் கொண்டது.
2. ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பாடப் புத்தகங்களை வழங்குதல்.
3. ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் எல்லோருக்கும் உணவும் பாலும் இலவசமாக வழங்குதல்.
இரண்டாவது, மூன்றாவது விடயங்களை இலங்கை சுதந்திரம் பெற்ற நீண்ட காலத்தின் பின் நடைமுறைப்படுத்தியது.
4. ஒவ்வொரு கிராமப் பிரதேசங்களிலும் இலவச மேய்ச்சல் நிலங்களை (Pasture Lands) உருவாக்குதல்.
5. ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக விதை நெல் வழங்குதல்.
6. நீர்ப்பாசனக் கட்டணங்களை நிரந்தரமாக நீக்குதல்.
7. தேயிலை மற்றும் ரப்பர் ஒப்பந்த கூப்பன்களை இல்லாதொழித்தல்.
8. மரங்கள் மற்றும் மரங்கள் கொண்டு செல்லல் சம்பந்தமான காடு சம்பந்தப்பட்ட சட்டங்களை இல்லாதொழித்தல்.
9. எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலையின்மைக்கான காப்புறுதியை உருவாக்குதல்.
10. வேலைகள் அல்லது பராமரிப்புக்கான விதிகளை உருவாக்குதல்.
11. எல்லாத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்தல்.
12. எல்லாத் தொழிலாளர்களுக்கும் 8 மணித்தியால வேலை நேரத்தை உத்தரவாதம் செய்தல்.
13. தொழிற்சங்கங்களை கடடாயமாகப் பதிவு செய்ய வேண்டுமென்ற நிபந்தனையை இரத்துச் செய்தல்.
14. தொழிற்சாலைகளில் வேலை செய்யும் சூழ்நிலைகளை நல்ல முறையில் பேணுதல்.
15. வாடகை கட்டுப்பாட்டை அறிமுகம் செய்தல்.
16. சேரிகளை ஒழித்துக் கட்டி தொழிலாளர்களுக்கு மலிவானதும்

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவ சீனா தயாராகவுள்ளது!

**- சீனத் தூதுவர்**

உலக வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள பதட்டங்களுக்கு மத்தியில் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஸி ஸென்கொங் (Qi Zhenhong) பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்:

சீனாவும் இலங்கையும் தெற்கு – தெற்கு ஒத்துழைப்புக்கு (South - South Cooperation) ஒரு முன்மாதிரியாக இருப்பதுடன், பரஸ்பர நன்மை மற்றும் ஸ்திரத்தன்மை என்பனவற்றின் அடிப்படையில் தமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் வலுவான நிலையிலும் உள்ளன. அமெரிக்காவின் வரி சம்பந்தமான கொள்கைகள் வளர்முக நாடுகள் மீதும், உலகப் பொருளாதாரம் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக இருக்கின்றன.

சமீபத்தில் அமெரிக்கா சர்வதேச சமூகத்தின் ஏகோபித்த எதிர்ப்பையும் மீறி, சீனா, இலங்கை உட்பட எல்லா வர்த்தகப் பங்காளிகள் மீதும் "பரஸ்பர வரி" (Reciprocal Tariff) என்ற தனது தீர்மானத்தைத் திணித்துள்ளது. இந்த நடவடிக்கை கொள்கைப் பின்வாங்கல்கள், குறிப்பிடக்கூடிய குழப்பங்கள், நிச்சயமற்ற தன்மை என்பனவற்றை உலகளவில் ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், இதன் தொடர்ச்சியாக பரந்தளவிலான குழப்பம் ஏற்பட்டது மட்டுமின்றி, உலக ரீதியிலான பொருளாதார சுருக்க நிலையும் (Economic Recession) ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா பொறுப்பற்ற முறையில் மற்றைய நாடுகளின் மீது வரி விதிப்பதன் மூலம், அடிப்படைப் பொருளாதார விதிகளையும், சந்தை விதிகளையும் மீறுவதுடன், பல்துறை வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் மூலம் எட்டப்பட்ட சமச்சீரான பெறுபேறுகளையும் நிராகரித்து, வரி விதிப்பை தனது சுயலாபத்துக்கான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துகிறது.

அமெரிக்காவும் ஏனைய மேற்கத்தைய வளர்ச்சியடைந்த நாடுகளும் உலக வர்த்தக அமைப்பை உருவாக்கியவர்களாகவும், அதன் நீண்ட காலத் தலைவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். உலகின் தெற்கத்திய நாடுகளான சீனா, இலங்கை போன்றவை மிகவும் கடுமையாக உழைத்து, தரமான பொருட்களை அமெரிக்காவுக்கும் இதர வளர்ந்த நாடுகளுக்கும் குறைந்த விலையில் ஏற்றுமதி செய்துவிட்டு,



குறைவான அந்நியச் செலாவணியையே பெற்றுள்ளன. அதே நேரத்தில், அமெரிக்கா கைத்தொழில்துறையில் சேவைகள் ஏற்றுமதி, உயர் தொழில்நுட்ப மற்றும் உபகரணங்கள் ஏற்றுமதி என்பனவற்றில் ஆதிக்கம் செலுத்தி அதிக இலாபத்தைப் பெற்று வந்துள்ளது. சீனா, இலங்கை போன்ற வளர்முக நாடுகள் உற்பத்தி செய்த அநேகமான பொருட்கள் மேற்கத்தைய கொம்பனிகளுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட பொருட்களே.

திறந்து விடுதலும் ஒத்துழைப்புமே இன்றைய வரலாற்றுப் போக்காக இருப்பதுடன், பரஸ்பர நன்மை பெறுதலே எல்லோருடைய அபிலாசையாகவும் உள்ளது. இலங்கை உட்பட பெரும்பாலான நாடுகள் வளர்ச்சியும் புத்துயிர்ப்பும் பெறுவதற்கு சுதந்திரமான பல்நோக்குள்ள வர்த்தக முறைமை மிகவும் முக்கியமானது. பாதுகாப்பான, ஸ்திரமான, அதிக ஒத்துழைப்புள்ள சர்வதேச சூழல் இன்றியமையாததாக இருப்பதுடன், நம்பிக்கையான பொருளாதார, வர்த்தக கூட்டாளிகள் இருப்பதும் அவசியமானது.

உலகமயமாக்கத்தின் பரிணாமத்தை எடுத்து நோக்கினால், அது திருப்பங்களுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியிலேயே முன்னேறியதைக் காணலாம். உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம், நுகர்வுப் பொருட்களுக்கு இரண்டாவது பெரிய சந்தை என்ற வகையிலும், பல்நோக்கு வர்த்தக அமைப்பின் ஒரு உறுதியான ஆதரவாளர் என்ற ரீதியிலும், ஒத்துழைப்பும், பன்மை நோக்குமே உலகம் எதிர்நோக்கும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான வழிமுறை என சீனா கருதுகிறது.

அத்துடன், பரஸ்பர நன்மையுடன் உலக வளர்ச்சி சந்தர்ப்பங்களை பகிர்வதிலும், வெற்றிக்கு – வெற்றி என்ற அடிப்படையில் பெறுபேறுகளையும் செல்வத்தையும் பங்கிடுவதிலும், உலக ரீதியிலான நன்மைகளை முன்னேற்றுவதிலும், சீனா தொடர்ந்தும் உயர்தர திறந்து விடும் கொள்கையைத் தொடர்வதுடன், வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான உயர்தரக் கொள்கைகளையும் பின்பற்றுகிறது.

சீனாவும் இலங்கையும் வரலாற்றுக் காலம் முதல் இன்றுவரை, நல்ல நண்பர்களாகவும், நல்ல சகோதரர்களாகவும், நல்ல பங்காளர்களாகவும் இருந்து வருகின்றோம். எமது ஒத்துழைப்பு தெற்கு – தெற்கு ஒத்துழைப்புக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கின்றது. புதிய சூழ்நிலைமைகளின் கீழ் சீனா, இலங்கை உட்பட எல்லா உலக நாடுகளுடனும் இணைந்து பணியாற்றத் தயாராக இருப்பதுடன், பன்முகத்தன்மையை உயர்த்திப் பிடித்து, பொருளாதார துன்புறுத்தல், வர்த்தகப் பாதுகாப்புவாதம் என்பனவற்றை எதிர்த்து, உலகளாவிய பொருளாதாரச் சூழல் வளர்ச்சிக்காக சர்வதேச நீதி நியாயம் என்பனவற்றின் அடிப்படையில் கூட்டாகச் செயல்படத் தயாராக இருக்கிறது.

இந்த விடயத்தில் சீனா, ஜனாதிபதி ஸி ஜின்பிங் அவர்களுக்கும், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களுக்கும் இடையில் எட்டப்பட்ட முக்கியமான புரிந்துணர்வின் அடிப்படையில் உறுதியுடன் செயல்படத் தயாராக இருக்கிறது. சீனாவின் உயர்தர வளர்ச்சி இலங்கைக்கு ஒரு அரிய வாய்ப்பாகும். சீனாவும் இலங்கையும் இணைந்து பணியாற்றுவதன் மூலம், இரு நாட்டு மக்களினதும், இந்தப் பிராந்தியத்தினதும் எதிர்காலத்துக்கு மாபெரும் நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு.

---

பிளவுபடுத்துவது புரட்சிகரமானது (To Split is Revolutionary) பிளவு தூய்மை படுத்துகின்றது (Split Purifies). ஒன்று எப்பொழுதுமே இரண்டாகும் (One always becomes Two). இரண்டு எப்பொழுதுமே ஒன்றாகாது (Two never becomes One).

**–மாவோ**

# தேசிய இறையாண்மையும், மக்களாட்சிக் குடியரசும்: அரசியலின் மாற்றுவடிவ தொடர்ச்சியா போர்?



மன்னராட்சிக் காலத்தில் மன்னர்கள் கைப்பற்றும் நிலப்பரப்பில் உள்ளவர்கள் எல்லாம் அவருடைய குடிகள் ஆனார்கள். அவருக்கு வரி செலுத்தினார்கள்.

அதனால் மன்னர்கள் தொடர்ந்து நாடுகளைக் கைப்பற்ற போர் புரிந்தார்கள். சிற்றரசர்கள் பேரரசர்கள் ஆக விரும்பினார்கள். பேரரசர்களுக்கு கப்பம் கட்ட மறுத்தார்கள். அவர்களை அடக்க பேரரசர்கள் போர் தொடுத்தார்கள்.

ஒரு பேரரசருக்கும் இன்னொரு பேரரசருக்கும் போர்கள் நடந்தன. உலக சக்ரவர்த்தி ஆக வேண்டும் என்றெல்லாம் கூட பலர் ஆசைப்பட்டார்கள். ஒரு பேரரசு உருவாகி சில நூற்றாண்டுகள் நிலைக்கும். பின்னர் சிதைந்து மறையும். வாரிசுகளுக்கிடையே போர் நடக்கும். நிர்வாகம் சீர்கெடும். பின்னர் மற்றொரு பேரரசு தோன்றும்.

இப்படிப்பட்ட ஓயாத போர்களிலிருந்து விடுபடவும், அரசமைப்பை நிலைப்படுத்தவும்தான் குடியரசு தத்துவம் உருவானது. இது எத்தகைய விழுமியங்கள் அடிப்படையில் அரசு அமைய வேண்டும் என சிந்தித்தது. அந்த விழுமியங்கள் வகுக்கும் சட்டங்களே ஆட்சி செய்ய வேண்டும். அரசர்கள் தன்னிச்சையாக ஆட்சி செய்யக் கூடாது என்ற கருத்து வலுப்பெற்றது.

ரோமப் பேரரசிலே மேட்டுக்குடியினர் அவையான செனட் என்ற அவையே கலந்தாலோசித்து முடிவெடுத்து ஆட்சி செய்யும் குடியரசு முறை இருந்தது. ஜூலியஸ் சீசர் பேரரசராக மாற விரும்பியபோது அவர் கொல்லப்பட்டார். அவருக்குப் பின்னர் அகஸ்டஸ் காலத்தில் பேரரசரின் ஆட்சியாக மாறியது.

**ராஜன் குறை**

நவீன காலத்தில், பதினைந்தாம் நூற்றாண்டில் அச்சுத் தொழிலும், வர்த்தகமும் பெருகிய நேரத்தில் ஐரோப்பாவில் மீண்டும் குடியரசு சிந்தனைகள் வலுவடைந்தன. மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி மன்றத்திலே இடம்பெற வேண்டும் என்ற சிந்தனை தோன்றியது. இது காலப்போக்கில் வளர்ந்து சட்டத்தின் ஆட்சியும், மக்கள் பிரதிநிதிகள் ஆட்சியும் இணைந்த மக்களாட்சி குடியரசுகள் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலே தோன்றத் துவங்கின.

ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் இருக்கும். இவற்றிற்கு பல்வேறு சார்புகளும், இவை பிரதிநிதித்துவம் செய்யும் நலன்களும் இருக்கும். உதாரணமாக உக்ரைன் நாடு சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்தபிறகு அதில் ஆட்சி செய்த கட்சிகள் ரஷ்ய சார்புள்ளவையாகவே இருந்தன. அவற்றின் மீது அதிருப்தி உருவான போது, அமெரிக்க–ஐரோப்பிய மேற்கத்திய நாடுகள் சார்புள்ள கட்சி ஆட்சிக்கு வந்தது.

உக்ரைன் உள்நாட்டு தேர்தல்களில் பலவித அந்நிய தலையீடுகள் நிகழ்ந்த தாக குற்றச்சாட்டுகள் இருதரப்பிலும் உண்டு. மேற்கத்திய நாடு சார்பான கட்சி உக்ரைனை நேட்டோ அமைப்பில் சேர்க்க முயற்சி செய்வது, ரஷ்யாவை கோபப்படுத்தியதால், அது ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு எதிரானது என்று கருதப்பட்டதால் ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்தது.

இது போல பாகிஸ்தானின் அரசியல் முரண்பாடுகளும் அந்த நாட்டில் இராணுவம் தன்னிச்சையாகக் கூட தீவிரவாதிகளுக்கு பயிற்சி தரும், அவர்கள் இந்தியாவைத் தாக்கும் சாத்தியத்தை உருவாக்குகிறது. ரஷ்யா ஆ.:ப்கானிஸ்தானில் தனக்கு ஆதரவான ஆட்சியை அமைத்ததும், அதனை வீழ்த்த போராளிகளுக்கு பயிற்சி கொடுக்க அமெரிக்கா பாகிஸ்தானை பயன்படுத்தியதும் இந்த பிரச்சினையின் நீண்ட கால வரலாற்றுப் பின்னணியாக உள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டு அரசியல் முரண்களும், சர்வதேச முரண்களும் பலவிதமான வகைகளில் இணைக்கப்படுகின்றன. இதன் காரணமாக எங்கே அரசியல் முடிகிறது, எங்கே போர் தொடங்குகிறது என்பதை கணிப்பது கடினமாக உள்ளது. தேசத்தின் இறையாண்மை என்ற அளவில் போர்க்காலத்தில் அனைத்து கட்சிகளும் ஒன்று பட்டாலும் அவற்றிற்கு இடையேயுள்ள முரண்களும் பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன. இதற்கெல்லாம் அடிப்படையில் முதலீட்டிய திரட்சியின் தேவைகள் செயல்படுகின்றன.

அது ஏற்படுத்தும் ஏற்றத்தாழ்வு, அதனை சமன்செய்ய முனையும் அரசியல் போக்குகளுக்கும், முதலீட்டிய ஆதரவு சக்திகளுக்கும் இடையிலான முரண் என பல்வேறு அரசியல் அழுத்தங்கள், தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் வெளிப்படுகின்றன.

இவையெல்லாம் சேர்ந்து மக்களாட்சி குடியரசுகள், பொதுவுடமை அரசுகள் என பல புதிய அரசமைப்புகள் தோன்றிய பின்னும், மானுடத்திற்கு போரற்ற வாழ்வை சாத்தியமாக்க மறுக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் முன்னெப்போதும் இல்லாத அணு ஆயுதங்கள் பயன்பாடு குறித்த அச்சமும் ஒவ்வொரு போரின் பின்னணியிலும் செயல்படுகிறது.

மக்கள் நல அரசியல், இறையாண்மை அரசியல் என்ற முரண்பாடு தீராமல் உலக கூட்டாட்சிக் குடியரசும் போரற்ற உலகமும் சாத்தியமா என்பதுதான் கேள்வி. எப்படி கருத்துள்ள சமூகப் படங்களை விட, வன்முறை நிரம்பிய சாகச கதாநாயகன் படங்கள் மக்களால் விரும்பிப் பார்க்கப்படுகிறதோ அதுபோல இறையாண்மை அரசியலுக்குள்ள கவர்ச்சி, மக்கள் நல அரசியலுக்கு பல நேரங்களில் இருப்பதில்லை.

தமிழ்நாட்டு அரசியல் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் ஏற்படுத்திய கருத்தியல் வெளிச்சத்தில் பெருமளவு மக்கள் நல அரசியலை முதன்மைப்படுத்தி இயங்குவது தமிழர்கள் பெரிதும் மகிழ வேண்டிய அம்சமாகும்.

அமெரிக்க கண்டங்கள் உலகின் பிற பகுதிகளில் வசிப்பவர்களால் கண்டறியப்பட்டு, ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு கடல்வழி கண்டுபிடிக்கப்பட்டு உலக வர்த்தகம் பெருகியது முதலீட்டிய உற்பத்தி முறைக்கும், தொழில் புரட்சிக்கும் வழி வகுத்தது.

இவ்வாறான மாற்றங்களுக்குப் பிறகு மக்களே தங்களை ஆண்டுகொள்ளும் சூழ்நிலையில் மன்னராட்சிக் காலத்துப் போர்கள் குறையும் என எதிர்பார்க்கப் பட்டது. ஏனெனில் இறையாண்மை என்பது மன்னரிடமிருந்து மக்களிடம் நகர்ந்தபிறகு யார் ஆட்சிப் பொறுப்பில் இருந்தாலும் மக்கள்தான் மன்னர்கள் என்பதால் எதற்காக நாடு பிடிக்கும் போர்கள் நடக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

தொழிற்புரட்சியில் முன்னணி வகித்த ஐரோப்பாவில் சிறிது காலம் போர்கள் குறைந்தன. ஆனால் தொழில் வளர்ச்சி பெருகியபோது, தொழில் வர்த்தக போட்டிகளால் மீண்டும் போர்கள் உருவாயின.

முன்னர் நடந்த போர்கள் போலன்றி ஐரோப்பிய நாடுகளும், அவர்கள் காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதிகளும் சேர்ந்து உலகம் தழுவிய போர்களாக இரண்டு உலகப் போர்கள் இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் நடைபெற்றன.

இதற்கு ஒரு முக்கிய காரணம் குடியரசுகளை உருவாக்கும்போது அவற்றினை சாத்தியமாக்க தேசியமும், தேசிய இறையாண்மை கொண்ட அரசுகள் என்ற கருத்தாக்கமும் உருவானதுதான். மன்னர் மீதான விசுவாசம், ராஜ விசுவாசம் ஆகியவற்றிற்காக போரிட்டதற்குப் பதிலாக தேசபக்தியின் காரணமாக போர்கள் தொடர்ந்தன.

போர்களே தேவைப்படாத சர்வதேச கூட்டாட்சிக் குடியரசினை உருவாக்க வேண்டும், உலகின் அனைத்து மக்களும் வளங்களை பகிர்ந்துகொண்டு வாழ வேண்டும் என்பன போன்ற சிந்தனைகள் பல்வேறு சிந்தனையாளர்கள், தத்துவவாதிகள், கலைஞர்கள் இடையிலேயே தோன்றத்தான் செய்தது. பொது உடைமைச் சிந்தனையாளர்களிடையே கூட சர்வதேசியத்திற்கும், தேசிய அளவிலான பொதுவுடமைக்கு முன்னுரிமை என்பவர்களுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றின.

உலகின் பல அரசியல் கட்சிகளும் மக்கள் நலன் சார்ந்த சுயாட்சிக் குடியரசிற்கும், தேசிய அரசினை மையப்படுத்திய இறையாண்மை நோக்கிற்கும் இடையில் சமரசம் செய்துகொள்பவையாக மாறின. இந்த இறையாண்மை நோக்கு என்பது உயர் வகுப்பினரால், வர்த்தக தொழில் முனைவோர்களால் முன்னெடுக்கப்பட்டாலும், வெகுமக்களை கவரக் கூடியதாக இருந்தது.

இறையாண்மை நோக்கு அரசு மைய சிந்தனை, அதிகாரக் குவிப்பு சிந்தனை ஆகியவற்றைக் கொண்டிருந்தது. மாறாக மக்கள் மைய நோக்கு என்பது அதிகாரப் பரவல், கூட்டாட்சி வடிவங்கள், சமூக நீதி, மக்கள் நலன் ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தது.

உதாரணமாக காந்தி தன்னுடைய ஹிந்து சுயராஜ்யம் நூலில் யார் ஆள்கிறார்கள் என்பதல்ல, எத்தகைய விழுமியங்கள் சமூகத்தை வழிநடத்துகின்றன என்பதே முக்கியம் என்று எழுதினார். கிராமங்கள் தன்னாட்சி பெற்றவையாக இருக்க வேண்டும் என்ற கிராமக் குடியரசு இலட்சியத்தினை உருவகிப்பவராக இருந்தார்.

திலகர் போன்றவர்கள் அரசாட்சி இந்தியர்கள் வசமாகவேண்டும் என்று இறையாண்மை நோக்கிற்கு அழுத்தம் கொடுத்தார்கள். சாவர்க்கர் இந்துக்களே இந்து ராஷ்டிரத்தை ஆள வேண்டும் என்று மத அடையாள இறையாண்மை தேசியத்தை சிந்தித்தார்.
இவற்றிற்கெல்லாம் இடையில் காங்கிரஸ் கட்சி தேசிய விடுதலையையும், அதே நேரம் குடியரசு நோக்கையும் இணைத்தே சிந்தித்தது எனலாம்.

**வெண்டல் வில்கியும், அறிஞர் அண்ணாவும்**

வெண்டல் வில்கி (Wendell Willkie) என்ற வழக்கறிஞர் இரண்டாம் உலகப்போர் சமயத்தில் அமெரிக்க அதிபர் தேர்தலில் ரூஸ்வெல்ட்டிற்கு (Roosevelt) எதிராக போட்டியிட்டவர். தேர்தலில் வெற்றிபெறாவிட்டாலும், அவருடைய கொள்கைகளுக்காக அமெரிக்கர்களின் நன்மதிப்பை பெற்றார். போர் நேரத்தில் உலக நாடுகள் பலவற்றிற்கு பயணம் செய்த அவர், பாசிச சக்திகளை ஒன்றுபட்டு முறியடிக்க பிரசாரம் மேற்கொண்டார். அந்த பயணத்திற்குப் பின் அவர் புதியதொரு உலக அரசியலமைப்பு உருவாக வேண்டும் என்று கோட்பாட்டாக்கம் செய்தார். அவர் *1943* ஆம் ஆண்டு எழுதிய ஒருலகம் (One World) என்ற நூல் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

வெண்டல் வில்கி முன்மொழிந்த உலக கூட்டாட்சிக் குடியரசு என்ற கருத்தாக்கத்தை அறிஞர் அண்ணா பல இடங்களில் குறிப்பிடுகிறார். அண்ணாவின் சிந்தனை திராவிடக் கூட்டாட்சிக் குடியரசு, இந்திய அல்லது ஆசிய கூட்டாட்சிக் குடியரசு அல்லது வில்க்கியின் உலகக் கூட்டாட்சிக் குடியரசு என எதுவாக இருந்தாலும் எத்தகைய சுயாட்சி உரிமைகள் தமிழ்நாட்டிற்கு இருக்க வேண்டும் என்று சிந்திப்பதாக இருந்தது எனலாம்.

அதனால்தான் அவருடைய திராவிட நாடு என்ற இலட்சியம் தேசியமாக இருக்கவில்லை. மாறாக நான்கு மொழிகள் பேசும் மக்களின் கூட்டாட்சிக் குடியரசாகவே இருந்தது. மக்கள் உரிமைகளைப் பெற தேசியவாதமே உதவும் என்ற எண்ணம் கொண்டவர்களுக்கு பெரியார், அண்ணாவின் குடியரசு சார்ந்த, மனுதர்ம மறுப்பை அடிப்படையாகக் கொண்ட சமநீதி விழுமியங்களை மையப்படுத்திய அரசியல் புரியவில்லை.

**முதலீட்டியத்தின் இரட்டை வேடம்**

நவீன கால அரசியல் உருப்பெற்றதன் முக்கிய விசையாக ஐநூறு ஆண்டுகளாக விளங்குவது ‘காபிடலிசம்’ (capitalism) எனப்படும் முதலீட்டியம்தான். முதலீட்டிய திரட்சி என்பது முதலில் தேசிய அளவில் நடக்கிறது. அதற்கு அடுத்த கட்டமாக திரட்டப்பட்ட முதலீடு ஏற்றுமதி செய்யப்பட்டு பிற நாடுகளில் முதலீடு

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒழிக்கப்பட வேண்டும்!



சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (InternationalCriminal Court) நீதியின் கலங்கரை விளக்கமென்றும், உலகின் மிகவும் மோசமான குற்றவாளிகளைப் பாரபட்சமின்றி விசாரிக்கும் நீதிமன்றம் எனவும் நீண்ட காலமாக ஏமாற்றி வந்துள்ளது. ஆனால், உண்மை இந்தக் கற்பனாவாதப் பிம்பத்திலிருந்து மாறானது.

சர்வதேச குற்றிவியல் நீதிமன்றம் "நாகரீகமான" என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் மேற்குலகம் தமது மேலாதிக்கத்தை மற்றவர்கள் மேல் திணிக்கும் ஒரு கருவியாகவே எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. இந்த நீதிமன்றம் உலகளவிலான நீதியை நிலைநாட்டுவதிலிருந்து விலகி, மேற்குலகின் பூகோள ரீதியான நலன்களுககு சவால் விடுபவர்களைத் தண்டிப்பதற்கானதும், தமது சகாக்களைப் பாதுகாப்பதற்கானதுமான ஒரு அரசியல் ஆயுதமாகச் செயல்பட்டு வந்துள்ளது.

எனவே, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைச் சீரமைப்பதற்குப் பதிலாக அதை ஒழித்துக்கட்ட வேண்டும். ஆரம்ப ஆண்டுகளில் இந்த நீதிமன்றம் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் மீது நீதியற்ற முறையில் வழக்குத் தொடர்ந்து தண்டனைகள் விதித்த அதே நேரத்தில், மேற்கத்தைய நாடுகள் ஆபிரிக்க நாடுகள் மீது இழைத்த குற்றங்களை கணக்கில் எடுக்காமல் நிராகரித்தது. ஆபிரிக்க நாடுகள் தம் மீதான யுத்த குற்றங்கள் குறித்தும், மனித உரிமை மீறல்கள் குறித்தும் முறையிடுவதற்கு எந்த வழியும் இருக்கவில்லை. காலத்துக்குக் காலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மேற்கத்தைய உலகம் தனது செல்வாக்கை விஸ்தரிப்பதற்கே உதவி செய்து வந்துள்ளது.

உலகின் முன்னணி வல்லரசுகளான அமெரிக்கா, ரஸ்யா, சீனா என்பன சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் அதிகாரத்தை நிராகரித்தே வந்துள்ளன. அவர்களது நிராகரிப்பு தற்செயலானது அல்ல. மாறாக, இந்த நீதிமன்றம் நடுநிலைமையாக செயல்பட்டதாக இல்லாமல் இருந்ததுடன், சட்டபூர்வமான நிறுவனமாக இருக்கவில்லை என்பதனாலாகும்.

ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் மீது சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நடவடிக்கை எடுப்பதற்குக் காரணம் அவர்கள் இழைத்த குற்றங்களே என அந்த நீதிமன்றத்தை நியாயப்படுத்துவோர் கூறுகின்றனர். இது மேற்கு நாடுகள் மீது நீதிமன்றம் எந்தவொரு பாரதூரமான நடவடிக்கைகளும் எடுக்காமைக்கான ஒரு சமாளிப்பாகும். அமெரிக்காவை எடுத்துக்கொண்டால், அது உலகளாவிய ரீதியில் பல யுத்தங்களை மேற்கோண்டுள்ளது, யுத்தக் குற்றங்களை இழைத்துள்ளது, கொடூரமான அரசுகளை ஆட்சியில் இருத்தியுள்ளது. ஆனால், எந்தவொரு அமெரிக்கத் தலைவரோ, இராணுவ ஜெனரலோ , சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டது கிடையாது.

**Timur Tarkhanov**

ஏன்? ஏனெனில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இருப்பது மேற்கத்தைய போர்க் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக அல்ல. பதிலாக, மேற்கத்தைய நலன்களைப் பாதுகாப்பதற்கே அது இருக்கிறது. ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு நீதிமன்றம் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சித்த போது அதற்கான எதிர்வினை பயங்கரமானதாகவும் வேகமானதாகவும் இருந்தது.

அமெரிக்கா நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. உடனடியாகவே நீதிமன்ற அதிகாரிகளுக்குத் தடை விதித்ததுடன், நீதிமன்றத்தை அடிபணிய வைப்பதற்காக தனது ஐரோப்பியக் கூட்டாளிகள் மீது அழுத்தங்களையும் பிரயோகித்தது. ஒரு சுயாதீனமான நீதி அமைப்பின் தன்மை இதுவாக இருக்க முடியாது. இது வொசிங்டனுக்கும், பிரசல்ஸ்சுக்கும் (Brussels) விசுவாசமான, நன்றியுள்ள நாய் போன்ற தன்மையாகும்.

ஒரு விதி விலக்காக, 2024இல் மேற்கத்தைய கூட்டாளி நாடான இஸ்ரேலின் அதிகாரிகள் மீது கைது பிடியாணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட போது, அமெரிக்காவின் பிரதிபலிப்பு வெளிப்பட்டது. வொசிங்டன் உடனடியாக நீதிமன்றத்தைக் கண்டித்ததுடன், அதன் அதிகாரிகள் மீது தடை விதிக்கப் போவதாகவும் பயமுறுத்தியது. அதன் செய்தி தெளிவானது. அதாவது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நீடித்திருப்பதானால், அது மேற்கின் பாதுகாப்புக்கு எதிராகச் செயல்படக்கூடாது என்பதே அது. நீதிமன்றத்தின் கூறப்படும் தெரிவு செய்யப்பட்ட நீதி என்பது அம்பலத்துக்கு வந்தது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மிகவும் தெளிவான குற்றம் என்னவெனில், அது உலகின் மிகவும் சக்தி வாய்ந்த நாடுகளின் மீதான நீதி சம்பந்தமாக அக்கறையற்று இருப்பதாகும். அமெரிக்கா தனது

படைகளின் பாதுகாப்பு சம்பந்தமான சட்டங்களைக் கொண்டிருக்கிறது. அதன்படி, அதன் படை வீரர்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தடுத்து வைக்க முடியாது.

அண்மையில் ஜெர்மனியின் தேர்தலில் வெற்றி பெற்றவர் நெத்தன்யாகு (Netanyahu) மீதான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கைது பிடியாணையை நிராகரித்துள்ளார்.

கிரீமியா (Crimea) மீதான ரஸ்யாவின் நடவடிக்கையை "ஆக்கிரமிப்பு" என சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வகைப்படுத்தியதால் அந்த நாடு 2016இல் ரோம் உடன்படிக்கையில் (Rome Statue) இருந்து விலகிக் கொண்டது. மொஸ்கோ இவ்வாறு செய்தது சரியானதே. ரஸ்யா போன்ற எந்தவொரு பிரதான வல்லரசும் எதற்காக அடிப்படையில் பக்கச் சார்பானதும், அரசியல் உள் நோக்கம் கொண்டதும், உலகளாவிய ஆதிக்கத்துக்கு எதிராக நிற்க வலுவற்றதுமான ஒரு நிறுவனத்தை ஆதரிக்க வேண்டும்?

சீனாவைப் பொறுத்தவரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இணைவது குறித்து ஒருபோதும் சிந்தித்தது கிடையாது. இந்த நீதிமன்றம் குற்றவாளிகளை பாரபட்சமற்ற முறையில் தண்டிபபதற்குப் பதிலாக, அதை உருவாக்கியவர்களின் நலன்களுக்குச் சேவை செய்கிறது என்பதை சீனா விளங்கிக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம் சட்ட அடிப்படையில் இயங்கவில்லை என்பதையும், மேற்கத்தைய கொள்கை வகுப்பாளர்களின் ஆலோசனைப்படியே செயற்படுகிறது என்பதையும் மறைத்து எந்தவொரு சுயாதீனமான நாட்டையும் முட்டாளாக்கிவிட முடியாது.

இந்த நீதிமன்றம் உண்மையான செயலதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை எவராவது விளங்காமல் இருக்க முடியாது. உலகளாவிய பிரதான வல்லரசு சக்திகளின் ஆதரவு இல்லாமல் இந்த நிறுவனம் மற்றைய நாடுளின் உதவியுடன் செயற்படுவது சற்றும் சாத்தியமில்லாதது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது பிடியாணைகளைப் பிறப்பிப்பது மிகவும் அரிதாக இருப்பதுடன், அவர்கள் தமது பலத்தின் அடிப்படையில் அதை நிராகரிக்கவும் செய்வர். நீதிமன்றம் இத்தகைய பல தீர்ப்புகளை வழங்கினாலும், அவற்றை நடைமுறைப்படுத்தும் பலம் இல்லாதபடியால், அவை வெறுமனே அடையாளபூர்வமானதாகவே இருக்கின்றன.

சில வேளைகளில் இந்த நீதிமன்றம் சில தீர்ப்புகளை நடைமுறைப்படுத்த முயன்றாலும், உலகின் உண்மையான அதிகார சக்திகளுடன் முரண்படுவதைத் தவிர்த்து, பலவீனமான நாடுகளின் தலைவர்களையே குறி வைக்கிறது. ஒரு சட்டபூர்வமான நீதியமைப்பு நிறுவனத்தின் அடையாளம் இதுவல்ல. இது ஒரு பல் இல்லாத பொம்மையின் அடையாளமாகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அதன் இலட்சியங்கள் காரணமாக நொருங்கிப் போகவில்லை. அந்த இலட்சியங்களை நடைமுறைப்படுத்த ஒருபோதும் முயற்சிக்காததின் விளைவாகவே அது நொருங்கிப் போய் உள்ளது. இந்த நீதிமன்றம் நீதியான முறையிலோ, பக்கச் சார்பற்றோ வடிவமைக்கப்படவில்லை என்பதை அதன் ஒவ்வொரு நடவடிக்கையும் நிரூபிக்கிறது. இது மேற்குலகின் ஒரு கருவியாக இருந்து, அதன் நலன்களுக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு எதிராகச் செயல்பட்டு, அவர்களுடன் கூட்டுச் சேர்ந்தவர்களைப் பாதுகாக்கின்றது.

சர்வதேச நீதியை விரும்புபவர்களுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அதற்கான பதில் அல்ல. ஒரு உண்மையான நீதிமன்றம் என்பது, சர்வ வியாபகமான நீதி, உண்மையான செயல்பாட்டு அதிகாரம், அரசியல் செல்வாக்குக்குள் உட்படாமை போன்ற தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் இவை எதுவும் இல்லை. இதனுடைய குற்றங்கள் தற்செயலானது அல்லாமல், அடிப்படையிலேயே உள்ளது என்பதால், அதைச் சீரமைப்பது ஒரு வழியாக இருக்க முடியாது.

ஒரே நியாயமான வழி இதை ஒழித்து விடுவதுதான். உலகத்துக்கு பாசாங்குத்தனமான நீதி வழங்கும் பாசாங்குத்தனமான நீதிமன்றம் ஒன்று தேவையில்லை. உலகிற்குத் தேவையானது மேற்கத்தைய சக்திகளின் தயவில் தங்கியிருக்காத, நீதியை நிலை நாட்டுவதற்கான உண்மையான பொறி முறையைக் கொண்ட ஒரு நீதிமன்றமே. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அத்தகைய ஒரு பொறிமுறையை ஒருபோதும் கொண்டிருக்கப் போவதில்லை. இந்தக் கேலிக்கூத்துக்கு முடிவு கட்டும் நேரம் வந்துளது.

(இந்தக் கட்டுரை RT News என்ற இணையத்தளத்தில் வந்த ஒன்றின் முக்கியமான பகுதிகளாகும்)

---

**8ம் பக்கத்தொடர்ச்சி...**

செய்யப்படுகிறது. முதலீட்டிய திரட்சியின் இந்த இரண்டு சுழற்சிகளும் ஒன்றோடொன்று பிணைந்தவை என்பதால் முதலீட்டியம் தேசிய அரசுகளையும் வைத்துக்கொண்டு, சர்வதேச முதலீட்டிய வலைப்பின்னலையும் வைத்துக்கொண்டு இயங்குகிறது எனலாம்.

இதனால் தேசிய இறையாண்மை என்பது இல்லை என்றும் சொல்ல முடியாது. இருக்கிறது என்றும் சொல்ல முடியாது. அமெரிக்க தேர்தலில், பிரிட்டிஷ் அரசியலில் ரஷிய ஆலிகார்க் (oligarch) எனப்படும் பெருஞ்செல்வந்தர்கள் தாக்கம் செலுத்துவதாகக் கூறுப்படுவதை பார்க்கும்போது நமக்கு எந்த நாட்டின் அரசியலும் முற்றிலும் தனித்தியங்குவதில்லையோ என்று தோன்றுவதை தவிர்க்க முடியாது.

இதில் இன்னொரு முக்கியமான பரிமாணமும் இருக்கிறது. அது என்னவென்றால் முதலீட்டிய குவிப்பின் முக்கிய பரிமாணமான ஆயுத வியாபாரம். உலக நாடுகளின் இராணுவச் செலவுகள் பல்லாயிரம் கோடி ரூபாய்களாக இருக்கும்போது ஆயுதங்கள், போர் விமானங்கள், இராணுவத் தளவாடங்கள் உற்பத்தி என்பது உலக பொருளாதாரத்தின் முக்கிய பங்காக இருக்கிறது. தேசிய அரசுகள் இராணுவத்திற்காக செலவு செய்தால்தான் ஆயுத வியாபாரம், போர் விமானங்கள் வியாபாரம் ஆகியவை நடக்கும். இதனால் பல நாடுகளுக்கு உலக நிதியமைப்புகள் கடன் கொடுப்பதும், அவை அந்த பணத்தில் ஆயுதங்கள் வாங்குவதும் நடக்கும். மேற்கத்திய நாடுகள் இந்த வியாபாரத்தை முக்கியமாக நம்பியுள்ளன. இதுவும் தேசிய இறையாண்மை அமைப்புகளை இராணுவ இயந்திரங்களாக பேணுவதற்கு ஒரு முக்கிய காரணம் எனலாம்.

---

முகமூடிக்குள் நின்று பேசுவதைக் கைவிடுங்கள். எது உங்கள் அரசியல் வழியோ அதை முன்வையுங்கள்.

**–மாவோ**

# அமெரிக்கா - தென் ஆபிரிக்கா மோதலின் பின்னணி என்ன?

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உலகளாவிய வெள்ளை மேலாதிக்கவாத இயக்கத்துக்குத் தலைமை தாங்குகிறார் என, அமெரிக்காவுக்கான தென் ஆபிரிக்கத் தூதுவர் ஏப்ரகிம் ரசூல் (Ebrahim Rasool) வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்ததின் காரணமாக, அமெரிக்கா அவரை விரும்பவில்லை என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மார்கோ ரூபியோ (Marco Rubio) பிரகடனம் செய்தார். அவரது இந்தக் கருத்து ஏற்கனவே 2025 ஆரம்பம் முதல் நலிவடைந்து போய் இருந்த அமெரிக்க – தென் ஆபிரிக்க உறவுகளை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியது.

2025 பெப்ருவரியில், வெள்ளை சிறுபான்மையினரின் உரிமைகள் மீறப்படுவதாகக் காரணம் காட்டியும், அமெரிக்க நலன்களுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டுள்ளதாகவும் காரணம் காட்டியும், ட்ரம்ப் தென் ஆபிரிக்காவுக்கான பொருளாதார உதவிகளை இரத்துச் செய்திருந்தார். பின்னர், ரூபியோ தென் ஆபிரிக்காவின் அமெரிக்க எதிர்ப்பு நிலையைக் காரணம் காட்டி, தென் ஆபிரிக்காவின் யோகனஸ்பேர்க் (Johannesburg) நகரில் நடைபெற்ற ஜி20 (G20) மாநாட்டில் பங்குபற்றாது தவிர்த்திருந்தார்.

அமெரிக்காவின் கோரிக்கைகளையும், நேசமற்ற வார்த்தைகளையும் தென் ஆபிரிக்கா நிராகரித்ததால், நிலைமை மேலும் மோசமடைந்தது. தென் ஆபிரிக்காவில் ஏற்பட்ட "நிலப் பிரச்சினை" என்ற விடயமும், 2025இல் தென் ஆபிரிக்க ஜனாதிபதி நிலச் சுவீகரிப்புச் சட்டத்தில் கையெழுத்திட்டதும், சிக்கல்களைத் தோற்றுவித்தது.

உண்மையில் வொசிங்டனுக்கும் (Washington) பிறிற்றோறியாவுக்கும் (Pretoria) இடையிலான பதட்டத்துக்குக் காரணம் வேறு சில அடிப்படை விடயங்களாகும். தென் ஆபிரிக்காவின் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கை, 'பிரிக்ஸ்' (BRICS)அமைப்பில் கொண்டுள்ள அங்கத்துவம், சீனாவுடனும் ரஸ்யாவுடனும் கொண்டுள்ள தந்திரோபாய அடிப்படையிலான ஒத்துழைப்பு, ரஸ்ய – உக்ரைன் மோதலில் பக்கம் சாராமல் எடுத்த தெளிவான முடிவு என்பவையே அவை.



Vsevolod Sviridov

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் (Joe Biden) காலத்தில், தென் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் (African Natioal Congress) கொள்கைகளை விமர்சிக்கும் வகையில், குறிப்பாக அதன் வெளிவிவகாரக் கொள்கை சம்பந்தமாக, தென் ஆபிரிக்காவுடனான உறவுகளை மறுமதிப்பீடு செய்யும் வகையிலான ஒரு சட்ட மூலம் அமெரிக்க காங்கிரசில் (US Congress) முன் வைக்கப்பட்டது. அமெரிக்க நிர்வாகத்தில் மாற்றம் வந்த கையோடு, நிகழ்ச்சி நிரலின் (DEI agenda - Diversity,Equity, Inclusion) மூலம் இன்னொரு முக்கியமான உடைவு ஏற்பட்டது.

தென் ஆபிரிக்காவின் நிலப் பிரச்சினை சுதந்திர ஆபிரிக்க நாடுகள் எதிர்நோக்கும் சவால்களை எடுத்துக் காட்டுவதுடன், இந்தச் சவால்களை எப்படி உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் தமது தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றன என்பதையும் காட்டுகிறது.

வெவ்வேறு ஆபிரிக்க நாடுகளில் "நிலப் பிரச்சினை" என்பது விசேடமான காரணிகளால் செல்வாக்கு செலுத்தப்படுவதோடு, நாட்டுக்கு நாடு வித்தியாசமாகவும் இருக்கின்றது. உதாரணமாக, கிழக்கு ஆபிரிக்காவை எடுத்துக் கொண்டால், விவசாயம் மூலைக்கல்லாக (Corner Stone) இருப்பதுடன், மொத்த தேசிய வருமானத்துக்கு 20 – 25 சத வீதம் வரை பங்களிப்பதாகவும், மக்கள் தொகையில் 40 முதல் 80 வீதம் வரையானோருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதாகவும் இருக்கின்றது.

அதற்கு மாறாக, தெற்கு ஆபிரிக்காவை எடுத்துக் கொண்டால், பொருளாதாரத்தில் சுரங்கத் தொழில் பாரம்பரியமாக முக்கியமான இடத்தை வகிப்பதுடன், விவசாயம் மொத்த தேசிய வருமானத்தில் 3 – 7 வீதமாக மட்டுமே இருக்கின்றது.

இருந்த போதும், கிழக்கு ஆபிரிக்காவைப் பொறுத்த வரை, விவசாயமே இந்தப் பிராந்தியத்தில் வேலை வாய்ப்புக்கான மூல வளமாக இருக்கின்றது.

பொருளாதாரம் விவசாயத்தில் தங்கி நிற்பது குறைவாக இருப்பதால், அது அரசாங்கம் மாற்றத்துக்குத் தயாராக இருப்பதையும், அதற்கெனப் பரீட்சார்த்தமாக சீர்திருத்தங்களை மேற்கொள்வதிலும் பிரதிபலிக்கின்றது.

அரசியல் பார்வைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. தெற்கு ஆபிரிக்காவைப் பொறுத்தவரையில், அரசியல் ஒரு பிரதான பாத்திரம் வகிப்பதை நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான ஊடக கவனிப்பு எடுத்துக் காட்டுகிறது. ரஸ்யாவின் உயர்தர அங்காடிகளில் கூட, விவசாயம் அதன் பிரதான பொருளாதார வருவாயாக இல்லாதபோதும், தென் ஆபிரிக்காவிலிருந்து வரும் தோடம்பழம், எலுமிச்சைக் காய்கள், வைன் என்பனவற்றை ஒருவர் சாதாரணமாகக் காண முடியும்.

இதன் தேசிய பொருளாதாரத்துக்கு விவசாயம் 2.6 வீதம் மட்டுமே பங்களிப்புச் செய்த போதிலும், மொத்த ஏற்றுமதியில் விவசாயப் பொருட்கள் 10 சத வீதமாக இருப்பதுடன், வேலை வாய்ப்புப் பெற்றவர்களில் 20 வீதத்தைக் கொண்டதாகவும் இருக்கின்றது. அத்துடன், தென் ஆபிரிக்காவில் காலனித்துவத்துக்கு முன்னர், வரலாற்று ரீதியாக விவசாயம் பூர்வகுடி மக்களின் கலாச்சாரத்தில் ஒரு அம்சமாக இருக்கவில்லை. இந்த மக்கள் கால்நடை வளர்ப்பிலும், கூட்டாக வாழ்வதிலுமே ஈடுபட்டிருந்தார்கள்.

தென் ஆபிரிக்காவின் ஸூலு (Zulu), சோதோ (Sotho), ஸோசா (Xhosa) சமூகங்களுக்கு நிலம் வைத்திருப்பது அரசியல் ரீதியாகவும், அடையாள ரீதியாகவும் ஒரு பலமாக இருந்த போதிலும், 19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் அவர்கள் பலவந்தமாக இடப்பெயர்வு செய்யப்பட்டு விட்டார்கள். இந்த இனக் குழுக்கள் நிலங்களின் உரிமையைப் பெறுவது, தமது தாயகத்தின் உரிமைகளை மீட்டெடுக்கும்

அடையாளமாகவும், தமது பூர்விக நிலங்களுடன் மீளவும் தொடர்பு படுவதாகவும் கருதப்படுகிறது.

சுதந்திரத்துக்குப் பின்னர் பெரும்பாலும் எல்லா ஆபிரிக்க நாடுகளும் நிலம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளன. நிலச் சீர்திருத்தம் ஒரு அலையாக வீசியது: சுதந்திரத்தைத் தொடர்ந்து 1960கள் மற்றும் 1970களிலும், பின்னர் மீண்டும் 1990களிலும் இது ஏற்பட்டது. ஆரம்பத்தில் நிலச் சீர்திருத்தம் காலனித்துவ பிளவுகள் ஏற்படுத்திய முரண்பாடுகளைத் தீர்ப்பதில் அக்கறை செலுத்தினாலும் பின்னர் அது, சந்தைத் தாராளமயத்தின் பால் குவிக்கப்பட்டது.

பல ஆபிரிக்க நாடுகளில் இந்த சீர்திருத்தங்கள் பிரதம காணிச் சொந்தக்காரர்களின் அந்தஸ்தையும், அவர்களது நலன்களையும் பாதுகாக்கும் ஒரு நாடக பாணிக் காட்சியாகக் காணப்பட்டது. இதில் ஒரு விதிவிலக்காக ஸிம்பாப்வேயில் (Zimbabwe)70 சத வீதமான விவசாய நிலங்களை வைத்திருந்த வெள்ளையினத்தவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு முயற்சித்த பின்னர், அரசாங்கம் அதிரடியாக ஒரு தீவிர கொள்கையைப் பின்பற்றி, வெள்ளை இனத்தவர்களின் நிலங்களை பெரும்பான்மை கறுப்பு இனத்தவர்களுக்குப் பங்கிட்டளித்தது.

ஒல்லாந்து (Dutch) மற்றும் பிரித்தானிய (British) காலனித்துவ காலகட்டத்திலும், பின்னர் நிறப்பாகுபாட்டுக் (Apartheid)காலகட்டத்திலும் (1948 – 1994) தென் ஆபிரிக்க கறுப்பு இனத்தவரின் நில உரிமைகள் திட்டமிட்ட அடிப்படையில் பறிக்கப்பட்டன. கறுப்பு மக்களுக்கு விவசாயத்துக்குப் பொருத்தமில்லாத இடங்கள் ஒதுக்கப்பட்டன. 1990களின் நடுப்பகுதி வரை சனத்தொகையில் 11 வீதமான வெள்ளை சிறுபான்மை இனத்தவர் வளமான நிலத்தில் 86 வீதத்தை, அதாவது 82 மில்லியன் ஹெக்டேயர் (Hectares) நிலத்தை உடமையாக வைத்திருந்தனர்.

1994இல் நெல்சன் மண்டேலா (Nelson Mandela) தலைமையில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பின்னர், கறுப்பு மக்களின் நிலங்களை மீட்டெடுக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் கட்டமாக, 1913இன் பின்னர் பலவந்தமாக நிலங்கள் பறிக்கப்பட்ட இனக் குழுக்களுக்கு காணிகளை மீண்டும் பெற்றுக் கொடுக்கும் வகையில் அல்லது இழப்பீடு வழங்கும் வகையில், 1994இல் காணி உரிமைகள் சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.

1994இல் வெள்ளை இனத்தவர் வசமுள்ள 30 வீதமான விவசாய நிலங்கள் கறுப்பு இன மக்களுக்கு மாற்றப்படும் என ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரகடனப்படுத்தியது. இருந்தபோதும், நிறவாதத்துக்குப் பிந்தைய தென் ஆபிரிக்க வர்த்தக சமூகம் சுரங்கத் தொழில்,வர்த்தகம், சக்தித்துறை மற்றும் தளபாடத்துறை என்பனவற்றில் ஆர்வம் காட்டியதால், நடைமுறையில் அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகள் எடுப்பதில் தயக்கம் காட்டியது.

“நிலச் சீர்திருத்தம்” பற்றிய விவாதங்கள் சமூகத்தில் தொடர்வதுடன், ஆபிரிக்க தேசிய காங்கிரசின் செல்வாக்கு படிப்படியாகக் குறைவடைந்து வருவதால், குறிப்பிடக்கூடிய அளவு தேர்தல்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றது.

- **Vsevolod Sviridov**, deputy director, expert at the Centre for African Studies, Higher School of Economics, Moscow

---

**3ம் பக்கத்தொடர்ச்சி…**

வளர்ச்சிக்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் இந்தியாவின் உதவி கிடைத்துள்ளது.

அத்துடன் பிரதமர் மோடி, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களின் சமூக – பொருளாதார அபிவிருத்திக்கென 2.4 பில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான உதவிகளையும் கொண்டு வந்துள்ளார். இன்னொரு புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் நாட்டிலுள்ள மத நிறுவனங்களின் கூரைகளில் சூரிய ஒளி மின் தகடுகளைப் பொருத்துவதற்கு இந்தியாவிடமிருந்து 1.7 மில்லியன் டொலர்கள் பெறுமதியான கடன் தொகை (Credit-Line) கிடைக்கவுள்ளது. (ஆனால் அரசாங்கம் தனியொரு மதத்துக்கு முன்னுரிமை வழங்காமல் எல்லா மதங்களையும் சமமாக நடத்துவதாக உத்தரவாதம் கொடுக்க வேண்டும்)

எமது நண்பர்களும் அயலவர்களுமானவர்களின் நோக்கங்கள் அதிகாரத்திலுள்ள அரசாங்கம் இந்த நிதிகளை எவ்வளவு தூரம் மக்களுடைய நன்மைகளுக்காகப் பயன்படுத்துகிறது என்பதிலேயே தங்கியிருக்கிறது.

சீனா எமது நாட்டுக்கு வழங்கிய நிதியுதவியையும் நாம் மறக்கக்கூடாது. அந்த உதவிதான் நாம் வங்குரோத்து நிலைக்குச் செல்லாமல் தடுத்து நிறுத்தியது.

டெயிலி மிரர் (Daily Mirror) – ஏப்பிரல் 7

---

**5ம் பக்கத்தொடர்ச்சி…**

தரமானதுமான வீடுகளை வழங்குதல்.
17. கீழ் நீதிமன்றங்களில் சட்டங்களையும் பதிவுகளையும் தேசிய மொழிகளில் செய்வதுடன், பொலிஸ் நிலையங்களிலும், அரசாங்க திணைக்களங்களிலும் கூட அதை நடைமுறைப்படுத்துதல்.
18. உடல் நலக் கொடுப்பனவு, வயோதிபக் கொடுப்பனவு, மகப்பேற்றுக் கொடுப்பனவு என்பனவற்றுக்காக தேசிய சுகாதார காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகம் செய்வது.
19. உயர்ந்த வருமானம் உள்ளோருக்கு அதிகளவான வரி விதித்தல்.
20. 25,000 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமானம் உள்ள தோட்டங்களுக்கு திரும்பவும் எஸ்டேட் வரியை அறிமுகம் செய்தல்.
21. பிரித்தானிய அரச சலுகைகளையும், யப்பானிய கோட்டா முறையையும் இரத்துச் செய்தல்.
22. எல்லா மறைமுக வரிகளையும் இல்லாதொழித்தல்.

இவைகள் எல்லாம் பிலிப் குணவர்த்தன ஒரு தூர நோக்குள்ள பொருளாதாரவாதி என்பதையும், அவர் University of Wisconsin-Madison பல்கலைக்கழகத்திலும், அமெரிக்காவின் பிரிட்டிஸ் கொலம்பிய பல்கலைக்கழகத்திலும் (Colombia University) பெற்ற பயிற்சிகள் சிறந்த முறையில் பொருளாதாரக் கொள்கைகளைத் திட்டமிடுவதில் உதவின என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

*(இந்தக் கட்டுரையாளர் இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் துணை ஆளுநராவார்)*

---

மக்கள் திரள் விழித்துக்கொள்ளும் முன்பே நாம் தாக்குதலில் இறங்கிட முயல்வோமென்றால் அது சாகசவாதமாகிவிடும். மக்களின் விருப்பத்திற்கு எதிராக செயல்படுவதற்கு அவர்களுக்கு உத்தரவிடுவோமென்றால் அது நிச்சயம் தோல்வியிலேயே முடியும். மக்கள் முன்னேற்றத்தை எதிர்நோக்கும்போது நாம் அதற்கு முயலாமலிருந்தால் அது வலதுசாரி சந்தர்ப்பவாதமாகிவிடும். **–மாவோ**

# கிரீன்லாந்து: அமெரிக்காவின் விடாப்பிடி!




டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இரண்டாவது தடவை பதவியேற்ற ஆரம்ப நாட்களில் அவரது முதலாவது ஜனாதிபதி பதவிக்காலத்தின் தொடர்ச்சியாக என்னென்ன விடயங்கள் இருக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

டென்மார்க் முடியாட்சிக்குள் (Kingdom of Denmark) ஒரு சுயாதிபத்தியமுள்ள நாடாக இருக்கும் அத்திலாந்திக் சமுத்திரத்தின் அருகில் உள்ள கிரீன்லாந்து (Greenland), அமெரிக்காவின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என அவர் 2019இல் முன் வைத்த கொள்கையைத் திரும்பவும் வலியுறுத்தியிருக்கிறார். அவர் ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் கடந்த டிசம்பரில் தனது சமூக ஊடகத் தளமான Truth Socialஇல் எழுதுகையில், “தேசிய பாதுகாப்பு மற்றும் உலகம் முழுவதுக்குமான சுதந்திரத்துக்காக கிரீன்லாந்து அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருப்பது அவசியமானது” எனக் குறிப்பிட்டார்.

இருப்பினும், “அமெரிக்காவின் பகுதியாக இருக்க வேண்டும்” என்ற கருத்தை 85 சத வீதமான கிரீன்லாந்து மக்கள் நிராகரித்து விட்டார்கள்.

கிரீன்லாந்தின் சுயாதிபத்தியம் சம்பந்தமான பிரச்சினை புதிய ஒன்றல்ல. 1867இல் அலாஸ்காவை (Alaska) ரஸ்யா அமெரிக்காவுக்கு விற்ற காலத்திலிருந்தே, அமெரிக்கா 20ஆம் நூற்றாண்டு முழுவதும் தனது பூகோள ரீதியிலான தேவைகளுக்காக ஆர்க்டிக் (Arctic) மீது பேராசை கொண்டு வந்துள்ளது. தொடர்ந்த ஆண்டுகளில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி வூட்ரோ வில்சன் (Woodrow Wilson), 1917இல் டென்மார்க்கிடமிருந்து வேர்ஜின் தீவுகள் (Virgin Islands) அமெரிக்காவின் கைகளுக்கு வந்த நாளிலிருந்து கிரீன்லாந்தை எடுப்பது குறித்து திரும்பத் திரும்பப் பேசி வந்துள்ளார்.

கிரீன்லாந்தை வருங்காலத்தில் விற்றுவிடும்படி பிரித்தானிய அரசாங்கம் டென்மார்க்கை வலியுறுத்தி வந்தது. அந்த கொள்கை இன்றும் தொடர்கிறது.

Freddie Reidy

யுத்த தந்திர முக்கியத்துவம் காரணமாக, இரண்டாம் உலக யுத்த காலத்தில் கிரீன்லாந்தில் அமெரிக்க தளங்கள் நிறுவப்பட்டன. பனிப்போரின் ஆரம்பக் கட்டத்தில் 1951இல் கிரீன்லாந்துடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தின் மூலம் Pituffik Space Base (Formerly known as the Thule Air Base)தளம் விஸ்தரிக்கப்பட்டது. இந்த நிலையம் இப்பொழுது வானியல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் ஒரு முக்கியமான இடமாகவும், ஏவுகணை முன்னெச்சரிக்கை நிலையமாகவும் இருக்கின்றது.

கிரீன்லாந்திலும், அதனுடன் இணைந்த ஆர்க்டிக் பிரதேசத்திலும் அரிய கனிம வளங்களும், எண்ணெய் மற்றும் வாயு என்பனவும் இருப்பதால் அந்தப் பிரதேசத்தைக் கட்டுப்படுத்துவதில் பிராந்திய ஆதிக்க சக்திகள் போட்டி போடுகின்றன. அதுவுமல்லாமல், அமெரிக்காவின் ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டும் ட்ரம்பின் பேராசைக்கு இன்னொரு காரணம் அங்கு பல கடல் போக்குவரத்து மார்க்கங்கள் இருப்பதுமாகும்.

2021இல் சுயெஸ் கால்வாயில் (Suez Canal) வர்த்தகப் போக்குவரத்துக்கான இடையூறுகள் வந்த பின்பு, அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் கிரீன்லாந்தை ஆதிக்கம் செய்வதில் உலக வல்லரசு சக்திகளுடன் போட்டிபோட ஆரம்பித்தது.

பூகோள ரீதியிலான வெப்ப நிலை அதிகரித்த பின், வட மேற்குப் வழித்தடம் (Northwest Passage)மற்றும் வட கடல் மார்க்கம் (Northern Sea Route) போன்ற ஆர்க்டிக் (Arctic)வணிகப் பாதைகள் கப்பலின் நேரத்தை மிச்சப்படுத்தும் பாதையாக முக்கியத்துவம் பெற்றுள்ளன. கிரீன்லாந்தின் கட்டுப்பாடு அமெரிக்காவிடம் வந்த பின்பு, இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள கடலோரங்களின் நீர் வளப்பகுதிகள் அமெரிக்க கண்காணிப்பின் கீழ் வந்துவிடும்.

ஆதலால், கிரீன்லாந்து மீதான கொள்கை ட்ரம்ப் தெற்குப் பகுதியில் உள்ள பனாமா கால்வாய் (Panama Canal)மீது கொண்டுள்ள பேராசையைப் பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகும். இந்த கால்வாய் (பனாமா) 1977இல் முன்னாளைய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டரால் (Jimmy Carter) முழுமையான கட்டுப்பாட்டு அதிகாரத்துடன் பனாமா நாட்டிடம் கையளிக்கப்பட்டது.

கிரீன்லாந்தையும், பனாமா கால்வாயையும் போல, கனடாவும் “அமெரிக்காவின் ஒரு மாநிலமாக” வர வேண்டும் என ட்ரம்ப் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், மெக்சிக்கோ வளைகுடாவின் (Gulf of Mexico) பெயரை அமெரிக்க வளைகுடா (Gulf of America) என பெயர் மாற்றும் ட்ரம்பின் யோசனையும், டெனாலியை (Denali) மக்கின்லே மலை (Mount Mckinley) என பெயர் மாற்றம் செய்யும் யோசனையும், அவரது “அமெரிக்கா முதன்மையானது” என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டது.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியனினதும் நேட்டோவினதும் ஒரு முக்கியமான உறுப்பு நாடான டென்மார்க்கின் (Denmark) வளையத்துக்குள் இருக்கும் கிரீன்லாந்தை எடுத்துக் கொள்வதற்காக யுத்தத்தில் ஈடுபடுவதற்கோ அல்லது இராணுவத் தலையீடு செய்வதற்கோ சாத்தியமில்லை.

இருப்பினும் ட்ரம்பின் வழமைப்பிரகாரம் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அவர் மிகவும் கடுமையான தந்திரோபாயங்களைக் கையாளக்கூடும். இதற்கு உதாரணமாக, அண்மையில் கொலம்பிய அகதிகளை நாடு கடத்தும் விடயத்தில் ஆரம்பத்தில் கொலம்பியா மறுப்புத் தெரிவித்த போதிலும், பின்னர் அமெரிக்கா அதை இராணுவ வழியில் அல்லாது சிவில் முறையில் தீர்த்துக் கொண்டதைச் சுட்ட முடியும். பொருளாதாரத் தடை என்ற பயமுறுத்தலின் மூலம் கொலம்பியா பலவந்தமாக அடிபணிய வைக்கப்பட்டது.

இந்தப் பயமுறுத்தலுக்கு டென்மார்க், டிசம்பரில் ஆர்க்டிக் (Arctic) பாதுகாப்புக்கு 1.5 பில்லியன் டொலர்கள் ஒதுக்குவதாக அறிவித்து விட்டு, அந்தத் தொகையை ஜனவரியில் 27இல் 2.05 பில்லியன் டொலர்களாக அறிவித்துப் பதிலளித்தது. கிரீன்லாந்து சம்பந்தமாக ஐரோப்பிய யூனியன் “பேச்சுவார்த்தை நடத்தாது” என்ற அந்த அமைப்பின் பிரதான கொள்கை வகுப்பாளர் Kaja Kallas அவர்களின் கருத்தை இந்த விடயங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ட்ரம்ப் தனது முதலாவது பதவிக் காலத்தில் நேட்டோ உறுப்பு நாடுகள் தமது பாதுகாப்பு செலவினங்களை இரட்டிப்பாக்கும்படி கோரியிருந்தார். அதன் மூலம் 4 பில்லியன் டொலர்களை அவர் மீதப்படுத்திக் கொண்டார்.

(இந்தக் கட்டுரையை சீன ஊடகமான CGTN இல் எழுதிய Freddie Reidy அவர்கள் இலண்டனைத் தளமாகக் கொண்டு செயல்படும் சுதந்திரமான எழுத்தாளராவார். அவரது கட்டுரையின் சில பகுதிகளே இங்கே தரப்பட்டுள்ளன)

# இந்தியா, சீனாவுக்கு புதிய ‘பொற்காலம்?’

சீனாவில் தலா 1000 தொன் தங்கம் புதைந்துள்ள இரண்டு தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது உலக மக்களின் ஆவலைத் தூண்டியுள்ளது.

தங்கச் சுரங்கத்தை கண்டறிவதற்கான ஆய்வை சீனா நீண்டகாலமாக நடத்தி வந்தது. அதில் ஹூனான் மாகாணத்தில் உள்ள சுரங்கத்தில் 1000 தொன் அளவுக்கு தங்கம் இருப்பதாக கடந்த நவம்பரில் அறிவிப்பு வெளியிட்டது. தற்போது லியோனிங் மாகாணத்தில் இன்னொரு 1000 தொன் தங்கச் சுரங்கம் இருப்பதாக மற்றொரு செய்தி வந்திருப்பது தங்க வர்த்தகர்கள் மத்தியிலும் உலக நாடுகள் மத்தியிலும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனா அதிநவீன ‘3டி ஜியாலஜிக்கல் மானிட்டரிங்’ (3D Geological monitoring) தொழில்நுட்ப உதவியுடன் இந்த தங்கப் புதையலை கண்டு பிடித்துள்ளதாக அறிவித்துள்ளது. ஹூனான் தங்கச் சுரங்கத்தின் மதிப்பு மட்டுமே 83 பில்லியின் அமெரிக்க டொலர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது இந்திய மதிப்பில் ரூ.7 இலட்சம் கோடிக்கும் அதிகம்.

இவை உறுதியானால், உலகில் அதிக தங்கம் உற்பத்தி செய்யும் தென்னாப்பிரிக்காவின் ‘சவுத்டீப் கோல்டு மைன்’ (South deep gold mine) சுரங்கத்தை விட பெரிய தங்கச் சுரங்கமாக சீனாவின் தங்கச் சுரங்கம் திகழும் என்று கணிக்கப்பட்டுள்ளது. தங்க உற்பத்தியில் சீனா கணிசமான அளவு தங்கம் உற்பத்தி செய்தாலும், தென்னாப்பிரிக்கா, அவுஸ்திரேலியா, ரஷ்யா நாடுகளே தற்போது முன்னணியில் உள்ளன.

இப்போது கண்டறியப்பட்டுள்ள தங்கச் சுரங்கத்தின்மூலம் அந்த நாடுகளை பின்னுக்குத் தள்ளி சீனா முந்திவிடும் என்றும் கூறப்படுகிறது. குறிப்பாக, உலக அளவில் வர்த்தக வரி தொடர்பான போர், பொருளாதார தேக்கம் குறித்த அச்சம் வெளியிட்டு வரும் நிலையில் சீனாவுக்கு கிடைத்துள்ள இந்த ‘ஜாக்பாட்’ அந்நாட்டை மற்ற நாடுகளை முந்திச் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று கூறப்படுகிறது.

இந்தச் செய்தி வெளியான சில தினங்களுக்குள் இந்தியாவிலும் ஒடிஷா மாநிலத்தில் அதிக அளவில் தங்கம் இருப்பதாக வெளிவந்துள்ள செய்தி இந்தியர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது. இந்திய புவியியல் ஆய்வு மையம் (Geological Survey of India - GSI) நடத்திய பல்வேறு கட்ட சோதனையின் முடிவாக ஒடிசா மாநிலத்தில் உள்ள சுந்தர்கர், நபராங்பூர், கியோஞ்சர், தியோகார் உள்ளிட்ட மாவட்டங்களில் கணிசமான அளவு தங்கம் புதைந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இயற்கை வளங்களுக்கு பெயர்பெற்ற ஒடிசா மாநிலத்தில் தங்கமும் புதைந்திருப்பதில் ஆச்சர்யமில்லை என்பது மட்டுமின்றி, இவை வெட்டியெடுக்கப்பட்டால் இந்தியாவின் பொருளாதாரத்திற்கு வலுசேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

உலக அளவில் ஜவுளி, பட்டாசு, மின்னணு உதிரிபாகங்கள் உற்பத்தி உள்ளிட்ட பல துறைகளில் போட்டியாளர்களாக இருந்துவரும் இந்தியாவும், சீனாவும் தங்க உற்பத்தியையும் கணிசமாக மேற்கொள்ளும்போது இருநாடுகளும் தெற்காசிய பிராந்தியத்தில் வலுவான பொருளாதார சக்திகளாக உருவெடுக்கும்.

இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்தியாவும் சீனாவும் கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு பொருளாதார வளர்ச்சியில் புதிய உத்வேகத்தைப் பெறுவதுடன் தெற்காசியப் பிராந்தியத்தில் அமைதியையும் நிலைநாட்டுவது அவசியம்.

# இன்று நாம் எதிர்கொள்ளும் பயங்கரவாதம் ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டது

இன்று நாம் எதிர்கொள்ளும் பயங்கரவாதம் ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்டது என புர்கினோ ஃபாசோ (Burkina Faso) நாட்டின் ஜனாதிபதியான கப்டன் இப்ராஹிம் தரோர் (Capt. Ibrahim Traoré) தெரிவித்துள்ளார். மே 9 ரஷ்யாவில் நடைபெற்ற உலகப்போர் வெற்றி தினக் கொண்டாட்டத்தில் அவர் பங்கேற்றிருந்தார். ஒரு செய்தி நிறுவனத்துக்கு கொடுத்த பேட்டியில் அவர் இன்று எங்கள் நாட்டில் புர்கினோ ஃபாசோவை சேராத வெளிநாட்டு குற்றவாளிகள் நிறைய உள்ளனர். அவர்கள் பயங்கரவாதக் குழுக்களுடன் இணைந்து செயல்படுகின்றனர்.

அந்த பயங்கரவாதிகளை பயிற்றுவிக்க வெளிநாடுகளில் இருந்து பயிற்சியாளர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு பயங்கரவாத பயிற்சியைத் தருகிறார்கள். “உண்மையில் அது வெறும் பயங்கரவாதம் மட்டுமல்ல, அது ஏகாதிபத்தியம்” என குறிப்பிட்டுள்ளார். மேலும் அந்த ஏகாதிபத்தியத்தின் நோக்கமே எங்களுக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையிலான போர் தொடர வேண்டும் என்பது தான். அப்படி தொடர்ந்தால் எங்களது வளர்ச்சி தடைபடும். எங்கள் வளத்தை அவர்களால் கொள்ளையடிக்க முடியும் என அவர் கூறியுள்ளார். மேலும் அந்த பயங்கரவாதத்திற்கு எதிராக நாங்கள் போராடுகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். புர்கினோ பாசோ ரஷ்யாவுடன் நெருங்கிய உறவுகளை கொண்டுள்ளது.

பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கான தொடர் போராட்டத்தில் புர்கினோ

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

முன்பக்கத்தொடர்ச்சி…

கொடுத்த கணக்கு வழக்கற்ற வாக்குறுதிகளில் ஒன்றைத்தன்னும் நிறைவேற்றவில்லை என்பதே மக்களின் நம்பிக்கையிழப்புக்குக் காரணமாகும்.

முன்னைய ஆட்சிகளின் தவறான கொள்கைகளால் ஏற்பட்ட பாதிப்பைப் பயன்படுத்தி, எப்படியும் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக தேசிய மக்கள் சக்தி தம்மால் நிறைவேற்ற முடியாது என்று தெரிந்து கொண்டும் ஏராளமான பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியது. மக்களும் அவர்களது பொய் வாக்குறுதிகளை நம்பி வாக்களித்து, அவர்களை வெற்றிபெற வைத்து ஒரு சந்தர்ப்பத்தை வழங்கினர்.

தேசிய மக்கள் சக்தி மக்களுக்குப் பொய் வாக்குறுதிகளை வழங்கியது மட்டுமின்றி, இலங்கையின் அரசியல் – சமூக – பொருளாதார கட்டமைப்பையே அடிப்படையில் மாற்றப் போவதாகவும் (System Change), இன்னொரு பொய் வாக்குறுதியையும் கொடுத்தது.அந்த வாக்குறுதியில் படித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் கூட ஏமாந்தனர். (ஒரு புரட்சியினால் அன்றி, முதலாளித்துவ தேர்தல் முறையால் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என்பதை இந்த 'சோசலிசவாதிகள்' அறியாமல் இருந்தார்களா அல்லது அறிந்தும் பொய் சொன்னார்களோ தெரியவில்லை))

ஆறுமாத காலத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட இந்த வீழ்ச்சியை பலரும் எதிர்பார்த்திருக்கவில்லை. (ஆனால் உண்மையான மார்க்சியர்கள் மட்டுமின்றி, ஓரளவு விபரம் தெரிந்தவர்களும் இந்த வீழ்ச்சியை எதிர்பார்த்திருந்தனர்)

இன்னொரு பக்கத்தில் சிறுபான்மை இனங்களான தமிழ் – முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு ஏற்பட்ட வீழ்ச்சியும் முக்கியமானதாகும்.

பொதுவாக, ஜனாதிபதித் தேர்தல்களைத் தவிர, நாடாளுமன்றத் தேர்தல்களில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்கள் – குறிப்பாக தமிழ் மக்கள் – ஆளும் கட்சிக்கு வாக்களிப்பது கிடையாது.

ஆனால் கடந்த பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாரம்பரியமான தமிழ் கட்சிகளை விட தேசிய மக்கள் சக்திக்கே அதிகமான மக்கள் வாக்களித்தனர் (உதாரணமாக, யாழ்.மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி சார்பில் ஒருவர் மட்டுமே தெரிவாக தேசிய மக்கள் சக்தி சார்பாக 3 பேர் தெரிவாகினர்)

இந்த வெற்றியை வைத்துக்கொண்டு, தமிழ் பேசும் மக்கள் இதுவரை காலமும் தாங்கள் பின்பற்றிய தத்தமது இனத்துவ தேசியவாதத்தைக் (Ethnic Nationalism) கைவிட்டு, இலங்கை நாட்டுத் தேசியத்தை (Country Nationalism) ஏற்றுக்கொண்டு விட்டனர் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் பெரும் பிரச்சாரம் செய்தது.

ஆனால், வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் உள்ளூராட்சித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தியை நிராகரித்து விட்டு, தாம் வழமையாக ஆதரித்து வந்த கட்சிகளுக்கு தமது ஆதரவை வழங்கி அவற்றை வெற்றிபெற வைத்துள்ளனர்.

மக்களின் இந்த மனமாற்றத்துக்குக் காரணம் அவர்கள் ஏனைய சிங்கள இனவாதக் கட்சிகளிடம் உள்ள பேரினவாத சிந்தனை போல நாடாளுமன்றத்தை மையப்படுத்தி இல்லாமல், தேசிய மக்கள் சக்தி சித்தாந்த ரீதியாகவே ஆழமான சிங்கள பேரினவாத சிந்தனையுள்ள ஒரு கட்சி என்பதைப் புரிந்து கொண்டதால் அல்ல.

நாட்டின் பெரும்பாலான மக்களைப் போலவே, சிறுபான்மை இனங்களும் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் தமது இனத்துவ ரீதியிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் என நம்பினார்கள். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்த ஆறுமாத காலத்தில் சிறுபான்மை இனங்களின் நம்பிக்கையை சிறிதளவேனும் நிறைவேற்றாதது மட்டுமின்றி, அவர்களை ஒதுக்கி மேலும் தேசிய ஒடுக்குறைக்கு உள்ளாக்கும் மேலும் பல புதிய நடவடிக்கைகளையும் எடுக்க ஆரம்பித்துள்ளது.

அதனால், "பிச்சை வேண்டாம், நாயைப் பிடி" என்ற நிலைமைக்கு இன்று சிறுபான்மை இனங்கள் உள்ளாகியுள்ளனர்.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணையின்படி மொத்தமாக 5 வருட ஆட்சிக்காலம் உள்ளது. அதில் ஆறு மாதமே செலவாகியுள்ளது. இந்த ஆறு மாதத்தில்தான் அரசாங்கம் இத்தகைய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இன்னும் காலம் போகப்போக எத்தகைய வீழ்ச்சிக்கு அரசாங்கம் உள்ளாகும் என்பதை இப்பொழுதே கூற முடியாது.

ஆனால், தாம் எதிர்கொள்ளப்போகும் வீழ்ச்சியின் அறிகுறிகளை முன்னுணர்ந்தபடியால்தான், ஜனாதிபதியும் அவரது அமைச்சரவைச் சகாக்களும், தமக்கெதிரான எதிர்க்கட்சியினரின் 'சதிகளுக்கு' எதிராக நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தவும் தயங்கமாட்டோம் என எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதன் அர்த்தம், முன்னைய கால ஆட்சிகள் எவையும் செய்யத் துணியாத வகையில், தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தான் பெற்ற அதிகாரம் கைநழுவிப் போகாதிருப்பதற்காக, ஆயுத பலாத்காரம் உட்பட எத்தகைய சர்வாதிகார நடவடிக்கைகளிலும் ஈடுபடத் தயாராக உள்ளது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், எதிர்க்கட்சிகள் என்று சொல்லப்படுபவை, வெறுமனே தேர்தல் கூட்டுகளைப் பற்றி மட்டுமேசிந்திக்காமல், நாட்டை வரப்போகும் பாசிச அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்காக பரந்துபட்ட ஜனநாயக சக்திகளின் ஒரு முன்னணியை அமைத்து வேலை செய்வது அவசியமானது.

ஜனநாயகத்தை விரும்புகின்ற, தேசத்தை விரும்புகின்ற ஒவ்வொரு அரசியல் கட்சியினதும், வெகுஜன அமைப்பினதும், தனி மனிதரதும் அத்தியாவசிய கடமை இன்றைய சூழ்நிலையில் இது மட்டுமே.

---

14ம் பக்கத்தொடர்ச்சி…

ஃபாசோவிற்கு ரஷ்யா தொடர் உதவிகளை செய்து வருகிறது. 2022 ஆண்டின் பிற்பகுதியில் இப்ராஹிம் அந்நாட்டின் ஆட்சியைப் பிடித்தார். ஜனாதிபதியாக பதவியேற்ற மூன்று மாதங்களில் 2023 ஜனவரி மாதம் அந்நாட்டில் இருந்த பிரான்ஸ் நாட்டின் இராணுவத்தை வெளியேற உத்தரவிட்டார். அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட ஏகாதிபத்திய நாடுகளின் சுரண்டலுக்கு எதிரான இவரது ஆட்சியை கவிழ்க்க கடந்த ஏப்ரல் மாதம் ஒரு சதி நடந்தது. அதனை அந்நாட்டு இராணுவம் முறியடித்தது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் இலங்கையை புதிய பனிப்போருக்குள் இழுத்துச் செல்லும்!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை!!

**இ**ந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின் போது இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவுடன் ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது சம்பந்தமாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (Communist Party of Sri Lanka) பொதுச்செயலாளர் வைத்தியக் கலாநிதி ஜி.வீரசிங்க (Dr.G.Weerasinhe) பின்வரும் அறிக்கையை விடுத்திருக்கிறார்:

எந்தவிதமான ஆலோசனைகளோ அல்லது நாடாளுமன்றத்தில் விவாதங்களோ இன்றி செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் புதிய பனிப்போருக்கும், இந்து சமுத்திரத்தை இராணுவ மயப்படுத்துவதற்கும் வலுவூட்டக்கூடிய ஒன்று.

இந்த உடன்படிக்கை இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னத்துக்கு எதிர்வினையாற்றும் இந்திய உத்தியின் ஒரு பகுதி என இந்திய ஊடகங்கள் இதை வர்ணித்துள்ளன.

"இந்தியாவின் பாதுகாப்புக்கோ, பிராந்தியத்தின் ஸ்திரத் தன்மைக்கோ, பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இலங்கையின் பிரதேசத்தை எவரேனும் பயன்படுத்துவதற்கு இலங்கை ஒருபோதும் அனுமதிக்காது" என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இந்தியப் பிரதமர் மோடியிடம் வாக்குறுதி அளித்துள்ளார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு இந்த விடயத்தில் அடிப்படையில் எந்த ஆட்சேபனையும் இல்லை. பிரச்சினை இந்தப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றித்தான்.

உண்மை என்னவென்றால், இந்தியா 'குவாட்' (Quad) அமைப்பின் ஒரு அங்கத்துவ நாடாக இருப்பதுடன், அமெரிக்கா சீனாவுடன் தொடங்குவதற்கு முனைப்புக் காட்டும் புதிய பனிப்போர் முயற்சிகளிலும் பங்கு வகிக்கிறது. 2024இல் தற்போதைய அமெரிக்க இராஜாங்க செயலாளர் மார்கோ ரூபியோ (Marco Rubio), நேட்டோ நாடுகளுக்கு வழங்குவது போன்ற ஒரு அந்தஸ்தை இந்தியாவுக்கும் வழங்க வேண்டும் என்ற



ஒரு தீர்மானத்தை அமெரிக்க காங்கிரசில் முன் வைத்தார். பெப்ருவரியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பும், மோடியும் சந்தித்த போது, தொழில்நுட்பப் பரிமாற்றம், கூட்டு ஆயுதத் தயாரிப்பை விரிவுபடுத்துவது, இராணுவச் செயற்பாட்டை பலப்படுத்துவது என்பனவற்றை உள்ளடக்கிய அமெரிக்க – இந்திய 10 வருட பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்து கொள்வது, இந்தியாவின் பின் கதவால் குவாட் அமைப்பில் இலங்கையைச் சிக்க வைக்கும் பெரும் அபாயத்தை இலங்கைக்கு ஏற்படுத்தும். இலங்கை தனது அணிசேரா நிலையை விட்டுக் கொடுத்து, நடைமுறையில் இந்தோ – பசுபிக் உத்தியின் (Indo - Pacific Strategy) ஒரு அங்கமாக மாறிவிடும். சீனா இலங்கையில் பிரதான முதலீட்டாளராகவும், வர்த்தகப் பங்காளியாகவும் இருப்பதுடன், சர்வதேச அரங்குகளில் இலங்கையின் சுயாதிபத்தியத்துக்கு ஆதரவு வழங்கி வரும் சூழலிலும், இந்த நிலைமை இலங்கையின் நலன்களுக்குப் பாதகமாக மாறிவிடும்.

இலங்கை இப்பொழுது எந்தவொரு நாட்டுடனும் பிரச்சினைகளைக் கொண்டிருக்காததால், எமக்கு பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்ய வேண்டிய தேவையில்லை. இலங்கையின் சுயாதிபத்தியமும், சர்வதேச உறவுகளும் பிரித்தானிய நவ காலனித்துவத்தில் தங்கியிருந்ததால், இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை ~ UK - Ceylon Defence Pact - (1947 – 1957) செய்யப்பட்டிருந்தது. அதுவே இலங்கை செய்திருந்த கடைசி பாதுகாப்பு உடன்படிக்கை.

அத்துடன், இந்த பாதுகாப்பு உடன்படிக்கை, இலங்கையும் இந்தியாவும் ஏற்றுக்கொண்ட, இந்து சமுத்திரப் பிராந்தியம் ஒரு சமாதான வலயமாக (Indian Ocean a Peace Zone) இருக்க வேண்டும் என்ற ஐ.நாவின் பிரகடனத்தை மீறி, இந்து சமுத்திரப் பகுதியை இராணுவமயப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவும் இருக்கின்றது.

நாட்டில் உள்ள அனைத்து ஜனநாயக மற்றும் முற்போக்கு சகதிகள் இந்த ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் என்னவென்பதைப் பகிரங்கப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். அத்துடன், இந்து சமுத்திரப் பிராந்தியம் சமாதான வலயமாக இருக்க வேண்டும் என்ற ஐ.நா. தீர்மானத்துக்கு புத்துயிர் ஊட்டுவதுடன், இந்தப் பிராந்தியத்தை இராணுவமயப்படுத்துவதற்கு எதிராக சர்வதேச ஆதரவைத் திரட்டும்படியும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். ஒரு புதிய பனிப்போர் உருவாவதிற்கு எதிராக அனைத்து ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளும் பரந்த ஐக்கிய முன்னணியொன்றை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக அதன் பொதுச்செயலாளர் டொக்டர் ஜி.வீரசிங்க விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**(குறிப்பு: குவாட் - Quad - என்பது அமெரிக்கா, யப்பான், ஆஸ்திரேலியா என்பன இணைந்து சீனாவுக்கு எதிராக உருவாக்கிய ஓர் இராணுவக் கூட்டணியாகும். பின்னர் அந்த அமைப்பில் சீனாவுக்கு எதிரான மோடியின் இந்தியாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டது)**